## (ஏ) சென்மதி நிலுவையும், வெளிநாட்டுச் சொத்துக்களும்

பிற்சேர்க்கை IIIல், அட்டவணைகள் 44இலிருந்து 48 வரையான பகுதியில் இலங்கைச் சென்மதி நிலுவையினதும், வெளிநாட்டுச் சொத்துக்களினதும் விபரமான புள்ளிவிபரங்கள் தரப்பட்டுள்ளன. சென்மதி நிலுவைத் தரவுகள் பெருமளவுக்கு இவ்வாண்டிற்கான உண்மையான, கிடைப்பனவுகள், கொடுப்பனவுகள் கொண்ட செலாவணிக் கட்டுப்பாட்டுப் பதிவுகளில் இருந்து பெறப்பட்டன. மேலும் இத்தரவுகள் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், திட்டமிடல் பொருளாதார அலுவல்கள் அமைச்சிலிருந்து பெற்றத் தகவல்கள் மூலம் துணைப்படுத்தப்பட்டது இத்தகைய தரவுகள் சுங்கத் திரட்டுகளின் அடிப்படையில் பெறப்பட்ட வர்த்தகப்புள்ளிகளிலிருந்து மாறுபடக்கூடும். இதற்குக் காரண ! என்னவெனில், சுங்கத்திரட்டுக்கள், உண்மையான பொருட்களின் அசைவு மாற்றங்களை எடுத்துக் காட்டும் வேளையில், செலாவணிக் கட்டுப்பாட்டுப் புள்ளிவிபரங்கள் பணக்கொடுப்பனவுகளை, கிடைப்பனவுகளுக்கான புள்ளிவிபரங்களைக் காட்டுகின்றன. மேலும் வழக்கமாக இந்த இரு அம்சங்களுக்கிடையிலும் கால இடைவெளி உண்டு.

### மொத்த அபிவிருத்திகள்

1974ம் ஆண்டில், இலங்கைச் சென்மதி நிலுவையானது புறநடையான தாக்கங்களுக்கு உள்ளாகியது. இறக்குமதியைப் பொறுத்தவரையில் எண்ணெய். உணவுப் பொருட்கள், ஏனைய மூலப்பொருட்கள் என்பவற்றின் விலைகள் அதிகரித்தமையினால் இறக்குமதி உண்டியலில் கணிசமான அதிகரிப்பு ஏற்பட்டது. ஏற்றுமதியைப் பொறுத்தவரையில் அநேக பொருட்களின் விலைகள் அதிகரித்த பொழுதிலும், ஏற்றுமதி அளவுகள் குறைவடைந்தமையினால், அதிகரித்த விலைகளினால் ஏற்படக்கூடிய பலாபலன்களைப் பெற முடியவில்லை.

இறக்குமதி மட்டங்களில் இறக்குமதி விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்புகளின் முழுத்தாக்கத்தினை ஏற்படுத்த அநுமதித்திருந்தால், வாழ்க்கைத் தரத்தில் பெருமளவு வீழ்ச்சி ஏற்பட்டிருக்கலாம். எவ்வாறாயினும், வெளிநாட்டு உதவி. குறுங்காலக் கடன்கள், மூலவளங்கள் 'பன்னாட்டு நாணய நிதி நிறுவனத்தினால் எண்ணெய் வசதி' என்ற திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டமையினால், நுகர்வுக்காகவும், பொருளாதார முயற்சிகளுக்காகவும் இலங்கையானது குறைந்தளவு இறக்குமதி மட்டத்தினைக் கொண்டிருப்பதற்கு முடிந்தது. இவ்வாறு குறைந்த மட்ட இறக்குமதிகளைச் செய்ய முயற்சித்தமையால் வந்த விளைவே என்றுமில்லாதளவு பெரிய, ரூபா 12,270 இலட்சம்கொண்ட வர்த்தகக் குறைவாகும். 1973ம் ஆண்டில் காணப்பட்ட ரூபா 2990 இலட்சக் குறைவுடன் ஒப்பிடுகையில், இது குறிப்பிடத்தக்க வீழ்ச்சியைக் காட்டுகின்றது. எனினும், சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்கில் காணப்பட்ட ஏனைய கொடுக்கல்வாங்கல்கள், மிகையை ஏற்படுத்தின. இவற்றில் மிக முக்கியமானது என்னவெனில் வெளிநாட்டு அரசாங்கங்களிலும் இருந்து பெற்ற நன்கொடைகள் ரூபா 2540 இலட்சமாகும். இது கடந்த ஆண்டு மட்டத்திலும் இரண்டு மடங்கிற்கு மேலானதாகும். மேலும் சென்மதி நிலுவையின் கட்புலனுக்க கணக்கில் காணப்பட்ட மொத்த மிகையானது, நடைமுறைக்கணக்கின் குறைவை ரூபா 8990 இலட்சமாகக் குறைவடையச் செய்தது.

## அட்டவணை II (ஏ) 1
## இலங்கையின் சென்மதி நிலுவைகள்

ப. இ. ரூபாய்களில்

| ஆண்டு | வர்த்தக நிலுவை | மாற்றற் கொடுப் பனவுகளை உள்ளடக்கிய தேறிய கட்புலனுகாதவை | நடைமுறைக் கணக்கில் உள்ள நிலுவைகள் | தேறிய நீண்ட தவணை மூலதனம் | அடிப்படை நிலுவை |
|---|---|---|---|---|---|
| 1958 | – 89 | – 64 | – 153 | + 8 | – 145 |
| 1959 | – 183 | – 25 | – 208 | + 32 | – 176 |
| 1960 | – 210 | – 11 | – 221 | + 22 | – 199 |
| 1961 | – 86 | – 7 | – 93 | + 11 | – 82 |
| 1962 | – 143 | + 3 | – 140 | + 39 | – 101 |
| 1963 | – 161 | – 7 | – 168 | + 80 | – 88 |
| 1964 | – 193 | + 33 | – 160 | + 8 | – 152 |
| 1965 | – 13 | + 72 | + 59 | + 58 | + 117 |
| 1966 | – 344 | + 54 | – 290 | + 137 | – 153 |
| 1967 | – 335 | + 46 | – 289 | + 161 | – 128 |
| 1968 | – 380 | + 25 | – 335 | + 224 | – 131 |
| 1969 | – 746 | – 51 | – 797 | + 275 | – 522 |
| 1970 | – 315 | – 35 | – 350 | + 184 | – 166 |
| 1971 | – 287 | + 71 | – 216 | + 404 | + 188 |
| 1972 | – 255 | + 59 | – 196 | + 292 | + 96 |
| 1973 | – 299 | + 138 | – 161 | + 190 | + 29 |
| 1974 (அ) | – 1,227 | + 328 | – 899 | + 265 | – 634 |

(அ) தற்காலிகமானவை. மூலம்: இலங்கை மத்திய வங்கி.

வருமானத்திற்கு மேலாகச் செலவு செய்தமையினுல் இலங்கைச் சென்மதி நிலுவையானது தொடர்ந்து குறைவைக்காட்டி வருகின்றது. மேலும் 1974ம் ஆண்டில் ஏற்பட்ட நிலைமை இப்போக்குகளுக்கு இணங்கிக்காணப்பட்ட போதிலும் இக்குறைவின் அளவும் 4 வருடங்களாகத் தொடர்ந்து முன்னேறி வந்த பின்பு ஏற்பட்ட ஆகக்கூடுதலான வீழ்ச்சியும் முக்கியமான அம்சங் களாகும். சென்மதி நிலுவையில் காணப்பட்ட குறைவினை நிதியீட்டம் செய்வதற்குப் பெறப்பட்ட வெளிநாட்டுக் கடன்கள். அபிவிருத்திக்கான வெளிநாட்டு மூலவளங்களில் முக்கியமான பகுதியாகும். இவ்வாருக, மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கமானது நடை-முறைக்கணக்குக் குறைவுடன் ஒரே

நேரத்தில் அசையும் போக்கினைக் கொண்டிருந்தமையினைக் கடந்த தரவுகள் காட்டுகின்றன. 1969/70 ஆண்டு வரை, நடைமுறைக்கணக்கின் குறைவானது, அதிகரித்துக்கொண்டுசெல்ல, உள்நாட்டு மொத்த மூலதன ஆக்கமும் அதிகரித்தது. அதனைத் தொடர்ந்து குறைவில் ஏற்பட்ட வீழ்ச்சியினைத் தொடர்ந்து மூலதன ஆக்க வீதமும் வீழ்ச்சியடைந்தது 1974ம் ஆண்டில் நடைமுறைக் கணக்கிலான குறைவு பெருமளவுக்கு அதிகரித்தாலும். வருமானத்திற்கு மேலாக ஏற்பட்ட செலவு, குறிப்பாக நுகர்வில் ஏற்பட்டமையால், மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம் வீழ்ச்சியடைந்தது.

1974ம் ஆண்டில் நாட்டிற்கு ஏற்பட்ட குறைவின் அளவானது, முந்திய ஆண்டுகளிலும் பார்க்க, நிதி மூலங்களைப் பன்முகப்படுத்த வேண்டிய தேவையை ஏற்படுத்தியது. முன்னைய ஆண்டுகளில், வெளிநாட்டு உதவி, குறுங்கால நிரம்பலர்களது கொடுகடன் ஒழுங்குகளைப் பெருமளவு கொண்டிருந்த நிதியில்லா மூலதனத் துறையிலான கொடுக்கல் வாங்கல்கள், இந்தக் குறைவை நிவர்த்தி செய்வதற்குப்போதியதாகும். இவைகள் ப. நா. நிதி நிறுவனத்தில் இருந்து பெற்ற கொள்வனவுகள் மூலமும், வெளிநாட்டு வர்த்தக வங்கிகளிடம் இருந்து, திரவ மூலவளங்களின் தற்காலிகத் தேவைகளைத் திருப்தி, செய்வதற்காகப் பெற்ற கடன்பாடுகள் மூலமும் துணை செய்யப்பட்டது. எவ்வாறுயினும் 1974ம் ஆண்டு வழக்கமான மூலங்களிலிருந்து பெற்ற வெளிநாட்டு உதவி, கொடுகடன்கள் போதியதற்றதாக இருந்தமையால் ப. நா. நிதி நிறுவனத்தினதும், எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகளிலிருந்தும் கொடுகடன்கள் பெறுவதன் மூலமும், இருபுடை வர்த்தகக் கொடுப்பனவுகள் ஒப்பந்தத்தின் கீழ் இலங்கைக்குச் சாதகமாக இருந்த நிலுவைகள் பெறுவதன் மூலமும் உதவிகள் கொண்டிருந்தன. நடைமுறைக்கணக்கில் உள்ள குறைவை நிதியீட்டம் செய்வதற்கு, பணசம்பந்தமான சொத்துக்களைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக பணசம்பந்தமான மொத்தக்கடன்களை உறுவதற்கு விரும்பியமையினுல், வெளிநாட்டுச் சொத்துக்களைப் பயன்படுத்துவதனை இலங்கை தவிர்க்கக்கூடியதாக இருந்தது. உண்மையில் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள், வருடத்தொடக்கத்தில் ரூபா 8,510 இலட்சமாக விளங்கி, வருடமுடிவில் ரூபா 8890 இலட்சமாக சிறிதளவால் அதிகரித்தது.

(அ) போக்குகளின் விபரங்கள்

1. வணிகப் பொருட் கணக்கு

சென்மதி நிலுவையில் உள்ள வணிகப் பொருட்கணக்கின் குறைவானது, 1974ம் ஆண்டில் என்றுமில்லாதளவு மோசமாக இருந்தது. 1973ம் ஆண்டில் இருந்த குறைவுடன் ஒப்பிடுமிடத்து, 1974ம் ஆண்டில் ரூபா 12270 இலட்சமாக விளங்கி நான்கு மடங்கு அதிகரிப்பினைக் காட்டியது. ஏற்றுமதியிலான வருவாய் மட்டம் ஆகக் கூடியளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்த போதிலும் குறைவு ஏற்பட்டது. இது பெருமளவுக்கு இறக்குமதிப்பட்டியலில் ஏற்பட்ட பாரிய அதிகரிப்பினுல் தான் ஏற்பட்டுள்ளது.

# சென்மதி நிலுவைகள்

| | பத்து இலட்சம் ரூபாய்களில் | | |
|---|---|---|---|
| | 1973 | | |
| | வரவு | பற்று | தேறிய |
| **1. வணிகப் பொருட் கணக்கு** | | | |
| ஏற்றுமதிகள் (க. ஏ. பெ.) | 2,346 | | |
| இறக்குமதிகள் (கொ.கா.க.) (சொந்த வளங்கள்) ... | | 1,986 | |
| (உதவி இறக்குமதிகளும் நிரம்பல் செய்வோர் கொடுகடன்களும்)* | | 658 | |
| மொத்த இறக்குமதிகள் ... | | 2,644 | |
| வர்த்தக நிலுவை (சொந்த வளங்கள்) ... | | | (+ 360) |
| வர்த்தக நிலுவை (எல்லா இறக்குமதிகளும்) ... | | | — 298 |
| **2. பணிகள் கணக்கு** | | | |
| நாணயமல்லாத் தங்கம் ... | — | — | — |
| துறைமுகப் பணிகள் ஏற்றியிறக்கற் காப்புறுதி ... | 177 | 62 | + 115 |
| வெளிநாட்டுப் போக்குவரத்து ... | 59 | 10 | + 49 |
| முதலீட்டு வருமானம் ... | 17 | 127 | — 110 |
| (i) இலாபங்களும் பங்கிலாபங்களும் ... | 1 | 19 | — 18 |
| (ii) ஏனைய (வட்டி) ... | 16 | 108 | 92 |
| அரசாங்கச் செலவு ... | 33 | 20 | + 13 |
| பல்வகைப் பணிகள் ... | 103 | 115 | + 12 |
| தனியார் மாற்றல்கள் ... | 48 | 46 | + 2 |
| மொத்தப் பணிகள் ... | 437 | 380 | + 57 |
| **3. மொத்த நடைமுறைக் கணக்குகள்** (சொந்த வளங்கள்) ... | (2,783) | (2,366) | (+ 417) |
| மொத்த நடைமுறைக் கணக்குகள் (எல்லா விடயங்களும்) ... | 2,783 | 3,024 | — 241 |
| **4. மூலதனக் கொடுப்பனவுகள்** | | 1,282 | — 1282 |
| கடன்கள் | — | 146 | — 146 |
| நிரம்பல் செய்வோர் கொடுகடன்கள் ... | — | 95 | — 95 |
| குறுந்தவணைக் கொடுகடன்கள் ... | — | 644 | — 644 |
| எண்ணெய் நட்ட ஈடும் ஆசிய அபிவிருத்தி வங்கியும் ... | — | — | — |
| தனியார் மூலதனம் ... | — | 5 | — 5 |
| ப. நா. நி. ... | — | 169 | — 169 |
| வங்கிக் கடன்பாடு ... | — | 112 | — 112 |
| ஏனைய ... | — | 111 | — 111 |
| மொத்த நடைமுறை, மூலதனக் கொடுப்பனவுகள் (சொந்த வளங்கள்) ... | | | (— 865) |
| மொத்த நடைமுறை, மூலதன கொடுப்பனவுகள் (எல்லா விடயங்களும்) ... | | | —1,523 |
| **5. நிதியீட்டல்** | | | |
| ப. நா. நி. எடுப்பனவுகள் ... | 137 | — | + 137 |
| வங்கிக் கடன்பாடுகள் ... | — | — | — |
| இருபுடை நிலுவைகள் ... | — | — | — |
| நிரம்பல் செய்வோர் கொடுகடன்கள் ... | 35 | — | + 35 |
| குறுந்தவணைக் கொடுகடன்கள் ... | 240 | — | + 240 |
| வெளிநாட்டுச் சொத்துக்கள் ... | 781 | — | + 781 |
| பண்ட உதவி ... | — | 125 | — 125 |
| செயற்றிட்ட, ஏனைய உதவி ... | 210 | — | + 210 |
| ... | 125 | — | + 125 |
| கொடைகள் ... | 83 | — | + 83 |
| தனியார் மூலதனம் ... | 6 | — | + 6 |
| ஏனைய ... | 14 | — | + 14 |
| சிறப்பு எடுப்பனவு உரிமைகள் | — | — | — |
| பிழைகளும் தவறுகளும் ... | 17 | — | + 17 |
| மொத்த நிதியீட்டல் ... | 1,648 | 125 | +1,523 |

(அ) தற்காலிகமானவை.

எண் தொகைகள் கிட்டிய எண்தொகைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.

* நன்கொடைகளை உள்ளடக்குகின்றன.

1973—1974

| பத்து இலட்சம் ரூபாய்களில் | | | சிஎஉ'ன் பத்து இலட்சம் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1974 (அ) | | | 1973 + | | | 1974 (அ) + | | |
| வரவு | பற்று | தேறிய | வரவு | பற்று | தேறிய | வரவு | பற்று | தேறிய |
| 3,376 | | | 309 | | | 421 | | |
| | 3,489 | | | 261 | | | 435 | |
| | 1,114 | | | 87 | | | 139 | |
| | 4,603 | | | 348 | | | 574 | |
| | | (— 113) | | | (+ 48) | | | (+ 14) |
| | | —1,227 | | | — 39 | | | — 153 |
| — | — | — | — | — | — | — | — | — |
| 173 | 66 | + 107 | 23 | 8 | + 15 | 22 | 8 | + 14 |
| 95 | 9 | + 86 | 8 | 1 | + 7 | 12 | 1 | + 11 |
| 37 | 148 | — 111 | 2 | 17 | — 15 | 5 | 19 | — 14 |
| — | 14 | — 14 | — | 3 | — 3 | — | 2 | — 2 |
| 37 | 134 | — 97 | 2 | 14 | — 12 | 5 | 17 | — 12 |
| 33 | 25 | + 8 | 4 | 3 | + 1 | 4 | 3 | + 1 |
| 107 | 120 | — 13 | 14 | 15 | — 1 | 13 | 15 | — 2 |
| 54 | 56 | — 2 | 6 | 6 | — | 7 | 7 | — |
| 499 | 424 | + 85 | 57 | 50 | + 7 | 62 | 52 | + 10 |
| (3,875) | (3,913) | (— 38) | (366) | (311) | (+ 55) | (483) | (487) | (— 4) |
| 3,875 | 5,027 | —1,152 | 366 | 398 | — 32 | 483 | 626 | — 143 |
| | 1,364 | —1,364 | — | 169 | — 169 | — | 170 | — 170 |
| — | 173 | — 173 | — | 19 | — 19 | — | 22 | — 22 |
| — | 214 | — 214 | — | 13 | — 13 | — | 27 | — 27 |
| — | 788 | — 788 | — | 85 | — 85 | — | 98 | — 98 |
| — | 3 | 3 | — | — | — | — | — | — |
| — | 4 | — 4 | — | — | — | — | — | — |
| — | 162 | — 162 | — | 22 | — 22 | — | 20 | — 20 |
| — | — | — | — | 15 | — 15 | — | — | — |
| — | 20 | — 20 | — | 15 | — 15 | — | 3 | — 3 |
| — | | (—1,402) | | | (— 114) | | | (— 174) |
| | | —2,516 | | | (— 201) | | | — 313 |
| 106 | — | + 106 | 18 | — | + 18 | 13 | — | + 13 |
| 271 | — | + 271 | — | — | — | 34 | — | + 34 |
| 16 | — | + 16 | — | — | — | 2 | — | + 2 |
| 167 | — | + 167 | 5 | — | + 5 | 21 | — | + 21 |
| 429 | — | + 429 | 32 | — | + 32 | 53 | — | + 53 |
| 836 | — | + 836 | 103 | — | + 103 | 104 | — | + 104 |
| — | 38 | — 38 | — | 16 | — 16 | — | 5 | — 5 |
| 328 | — | + 328 | 28 | — | + 28 | 41 | — | + 41 |
| 103 | — | + 103 | 16 | — | + 16 | 13 | — | + 13 |
| 254 | — | + 254 | 11 | — | + 11 | 32 | — | + 32 |
| 12 | — | ÷ 12 | — | — | — | 1 | — | + 1 |
| 16 | — | + 16 | 2 | — | + 2 | 2 | — | + 2 |
| — | — | — | — | — | — | — | — | — |
| 16 | — | + 16 | 2 | — | + 2 | 2 | — | + 2 |
| 2,554 | 38 | +2,516 | 217 | 16 | + 201 | 318 | 5 | + 313 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

## அட்டவணை II (ஏ) 3

## வெளிநாட்டு வளங்களும் அவற்றின் பயன்பாடுகளும்

| விடயம் | பத்து இலட்சம் ரூபாய்கள் 1971 | 1972 | 1973 | 1974(அ) | சதவீதப் பங்கு 1971 | 1972 | 1973 | 1974(அ) |
|---|---|---|---|---|---|---|---|---|
| **(அ) வளங்கள்** | | | | | | | | |
| 1. **வணிகப் பொருள் ஏற்றுமதிகள்** க. ஏ. பெ. | 1,930 | 1,898 | 2,346 | 3,376 | 51 | 51 | 53 | 52 |
| 2. **பணிகள் கணக்கு** | 333 | 332 | 437 | 499 | 9 | 9 | 10 | 8 |
| 3. **மூலதன உட்பாய்வு** | 628 | 525 | 424 | 697 | 16 | 14 | 10 | 11 |
| அவற்றில்:— | | | | | | | | |
| (அ) கடன்கள் 1 | 346 | 402 | 335 | 431 | 9 | 11 | 8 | 7 |
| (ஆ) ஏனைய உதவிகள் 2 | 152 | 13 | — | — | 4 | — | — | — |
| (இ) கொடைகள் 1 | 105 | 100 | 83 | 254 | 3 | 3 | 2 | 4 |
| (ஈ) தனியார் மூலதனம் | 25 | 10 | 6 | 12 | — | — | — | — |
| 4. **குறுந்தவணைப் பொறுப்புக்கள்** | 903 | 989 | 1,207 | 1,841 | 24 | 26 | 27 | 29 |
| (அ) ப. நா. நி. இலிருந்து மொத்த எடுப்பனவுகள் | 83 | 163 | 137 | 106 | 2 | 4 | 3 | 2 |
| (ஆ) சிறப்பு எடுப்பனவு உரிமைகள் | — | — | — | 271 | 2 | 2 | — | 4 |
| (இ) இருபுடைக் கொடுப்பனவு ஒப்பந்த மிகுதிகளில் அதிகரிப்பு | 63 | 62 | 35 | 167 | — | — | 1 | 3 |
| (ஈ) வெளிநாட்டு வங்கிகளிடமிருந்து கடன்பாடுகள் | — | 12 | — | 16 | — | — | — | — |
| (உ) குறுந்தவணைக் கொடுகடன்கள் | 658 | 593 | 781 | 836 | 17 | 16 | 18 | 13 |
| (ஊ) நிரம்பல் செய்வோர் கொடுகடன்கள் | 58 | 52 | 240 | 429 | 2 | 1 | 5 | 7 |
| (எ) ஏனைய | 41 | 107 | 14 | 16 | 1 | 3 | — | — |
| 5. **வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட வீழ்ச்சி (ஸ்ரேலிங் கடனுக்குரிய கடன்கரைப்பு நிதியங்களைக் கழித்து)** | — | — | — | — | — | — | — | — |
| மொத்தம் | 3,794 | 3,744 | 4,414 | 6,413 | 100 | 100 | 100 | 100 |
| **(ஆ) பயன்பாடு** | | | | | | | | |
| 6. **வணிகப் பொருள் இறக்குமதிகள்** கொ. கா. க. | 2,217 | 2,153 | 2,644 | 4,603 | 58 | 58 | 60 | 72 |
| அவற்றின் உதவிகள் | 509 | 554 | 658 | 1,114 | 13 | 15 | 15 | 17 |
| 7. **பணிகள் கணக்கு** | 367 | 373 | 380 | 424 | 10 | 10 | 9 | 7 |
| (அ) முதலீட்டு வருமானம் | 134 | 125 | 127 | 148 | 3 | 3 | 3 | 2 |
| (ஆ) புலப் பெயர்வாளர் மாற்றல்கள் | 40 | 50 | 46 | 56 | 1 | 1 | 1 | 1 |
| 8. **மூலதனக் கடனழித்தல்** | 132 | 133 | 151 | 177 | 3 | 4 | 3 | 3 |
| (அ) அலுவலகக் கடமை சார்ந்த | 96 | 125 | 146 | 173 | 2 | 3 | 3 | 3 |
| (ஆ) தனியார் | 36 | 8 | 5 | 4 | 1 | 1 | — | — |
| 9. **குறுந்தவணைப் பொறுப்புக்கள்** | 976 | 873 | 1,131 | 1,187 | 26 | 22 | 25 | 18 |
| (அ) ப. நா. நி. நிதியிலிருந்து மீளக் கொள்வனவுகள் | 145 | 170 | 169 | 162 | 4 | 5 | 4 | 3 |
| (ஆ) இருபுடைக் கொடுப்பனவு உடன்படிக்கையிலுள்ள மீதிகளில் குறைவு | 57 | 11 | — | — | 2 | 2 | 2 | — |
| (இ) வெளிநாட்டுக் கடன்பாடுகள் | 81 | — | 112 | — | 2 | — | 3 | — |
| (ஈ) குறுந்தவணைக் கொடுகடன்கள் | 614 | 570 | 644 | 788 | 16 | 15 | 15 | 12 |
| (உ) நிரம்பல் செய்வோர் கொடுகடன்கள் | 65 | 84 | 95 | 214 | 2 | 2 | 2 | 3 |
| (ஊ) ஏனைய | 14 | 38 | 111 | 23 | — | — | 3 | — |
| 10. **வெளிநாட்டுச் சொத்துக்களின் அதிகரிப்புக்கள் (ஸ்ரேலிங் கடனுக்குரிய கடன்கரைப்பு நிதியங்களைக் கழித்து)** | 89 | 224 | 121 | - 34 | 2 | 6 | 3 | 1 |
| 11. **சமப்படுத்தும் விடயங்கள்** | 13 | - 12 | - 13 | - 12 | — | — | — | — |
| மொத்தம் | 3,794 | 3,744 | 4,414 | 6,413 | 100 | 100 | 100 | 100 |

(அ) தற்காலிகமானவை.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

1 செயற்றிட்ட உதவிகளாகவும், பண்ட உதவிகளாகவும் பெறப்பட்ட உதவிகளை உள்ளடக்குகின்றது.

2 மக்கள் சீனக் குடியரசிடமிருந்து பெறப்பட்டதான பணக் கடன்.

**(i) ஏற்றுமதிகள்**

1973ம் ஆண்டில் காணப்பட்ட ஏற்றுமதி வருவாயிலான அதிகரிப்புகளிலும் பார்க்கக் கூடியதாக 1974ம் ஆண்டு விளங்கியது. 1974ம் ஆண்டில் மொத்த ஏற்றுமதி வருவாய்கள் ரூபா 33,760 இலட்சமாக விளங்க, 1975ம் ஆண்டிலும் 1972ம் ஆண்டிலும் முறையே ரூபா 23,460 இலட்சமாகவும் ரூபா 18,980 இலட்சமாகவும் விளங்கியது ஏறக்குறைய எல்லா ஏற்றுமதிப் பொருட்களுக்கும் கிடைத்த கூடிய வருவாய்கள், சாதகமான விலைகளின் விளைவாகும். முக்கிய பிரிவுகள் அடிப்படையிலான ஏற்றுமதி வருவாய்களின் தொகைகள் பின் வருமாறு உள. தேயிலை ரூபா 13,670 இலட்சங்கள் - 40 சதவீதம். றப்பர் ரூ. 7,460 இலட்சங்கள் - 22 சதவீதம். தெங்குப் பொருட்கள் (கொப்பரா, தேங்காய்த்துருவல், எண்ணெய்) ரூபா 4510 இலட்சங்கள் - 13 சதவீதம். இரத்தினக்கற்களும் அருங்கற்களும் ரூபா 1,000 இலட்சங்கள் - 3 சதவீதம், பல்வகைக் கைத்தொழில், விவசாயப் பொருட்கள் (பெற்றோலிய உபபொருட்களும் உட்பட) ரூபா 7,120 இலட்சங்கள் - 21 சதவீதம்.

**(அ) பெருந்தோட்டத்துறை**

ஏறக்குறைய எல்லா மரப்பயிர்களின் பொருட்களுக்குக் கூடிய விலைகள் இருந்தபோதிலும், இவ்விலைகளுக்கு ஏற்ற விதத்தில் உற்பத்தி சாதகமாக அமையாமல் உற்பத்தி கணிசமானளவு வீழ்ந்தது. 1973ம் ஆண்டு பொருட்களுக்கு ஏற்பட்ட செழிப்பில் தேயிலை விலைகள் மந்தநிலையில் இருந்தது. ஆனல் 1974ம் ஆண்டு ஆரம்பகாலத்தில் இருந்து விலைகளில் கணிசமான உயர்வு ஏற்பட்டாலும், ஏற்றுமதி வருவாயில் முன்னேற்றம் காலம் கடந்தே ஏற்பட்டது. முதல் விளைவுப் பொருட்களுக்கு 1973ம் ஆண்டு ஆரம்ப காலத்தில் ஏற்பட்ட செழிப்பினல் றப்பருக்கும் நன்மை ஏற்பட்டது 1974ம் ஆண்டு ஆரம்பகாலத்தில் எண்ணெய் விலைகள் உயர்வடைந்தமையைத் தொடர்ந்து றப்பர் விலைகள் மேலும் முன்னேற்றமடைந்தன 197 ம் ஆண்டிலும் பார்க்க, 1974ம் ஆண்டில் சராசரி றப்பர் விலைகள் உயர்வாக இருந்தாலும்கூட 1974ஆம் ஆண்டில் நடுப்பகுதியில் இருந்து றப்பர் விலைகள் மிகவும் பெரிதளவால் வீழ்ச்சியடைந்தது. 1973ஆம் ஆண்டில் செறிவான பால் எடுக்கும் முறை மூலம் உயர்வான விலைகளுக்கு ஏற்றுமதி அளவுகள் செவிசாய்த்த போதிலும், 1974ஆம் ஆண்டில் உற்பத்தி கணிசமானளவால் வீழ்ச்சியடைந்தது. இவ்வாறு உற்பத்தி வீழ்ச்சி ஏற்பட்டாலும், கூடிய சராசரி விலைகள் றப்பரின் மொத்த வருவாய்கள் 1973ஆம் ஆண்டில் ரூ. 5,190 இலட்சமாக விளங்க 1974ஆம் ஆண்டில் ரூ. 7,460 இலட்சமாக அதிகரிக்கக் காரணமாயிருந்தது. 1974ஆம் ஆண்டில் தெங்கு உற்பத்தி 1972ஆம் ஆண்டில் ஈட்டிய ஆகக்கூடிய நிலையில் இருந்து மூன்றுவதாகும். அதன் விளைவாகக் கைத்தொழிலானது, இவ்வாண்டில் நிலவிய என்றுமில்லாதளவு சாதகமான விலைப்போக்குகளிலான நன்மைகளை முற்றிலும் பெறமுடியவில்லை எல்லாத் தெங்குப் பொருட்களும் கூடிய விலைகளைப் பெற்றன. தெங்குப் பொருட்களிலான மொத்த வருவாய் 1973ஆம் ஆண்டில் ரூபா 1,460 இலட்சமாக இருந்து 1974ஆம் ஆண்டில் ரூபா 4,510 இலட்சமாக அதிகரித்தது.

**(ஆ) ஏனைய ஏற்றுமதிகள்**

ஏனைய ஏற்றுமதிப் பொருட்களிலான வருவாய் ரூ. 8,120 இலட்சமாகும். 1973ஆம் ஆண்டு மட்டத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 1,550 இலட்சத்திற்கு

மேலால் அதிகரித்துக் காணப்பட்டது. இவ்வதிகரிப்புக்கு காரணமாக கப்பல் எரிபொருள், வானூர்தி எரிபொருள் என்பனவற்றின் மீள ஏற்றுமதியும், நப்தா போன்ற பெற்றோலிய உப உற்பத்திகளின் ஏற்றுமதியும் விளங்குகின்றன. பெற்றோலியப் பொருட்களிலான ஏற்றுமதி வருவாய்கள் ரூ. 3,500 இலட்சங்களாக விளங்கின. இது பெருமளவுக்கு மசகெண்ணெய் பன்னாட்டு விலை உயர்ந்தமையினால்தான் ஏற்பட்டது.

மேலும் தெங்கு உப உற்பத்திப் பொருட்களின் வருவாய்கள் குறிப்பாக, தும்பு நார், சிரட்டைக்கரி என்பவற்றின் வருவாய்கள் கணிசமானளவால் அதிகரித்தன. இக்குறிப்பிட்ட பகுதியில் ஈட்டப்பட்ட மொத்த வருவாயான ரூ. 2,170 இலட்சங்களில் தும்புநார் ரூ. 1.610 இலட்சங்களாக விளங்கி, 1973ஆம் ஆண்டு மட்டத்துடன் நோக்குகையில் இரண்டு மடங்காக விளங்குகிறது. 1974ஆம் ஆண்டில் சிரட்டைக்கரியின் ஏற்றுமதி, ஒரு சிறிய பகுதியாக விளங்கியமையில் இருந்து 5 மடங்காக அதிகரித்தது. இது இப்பகுதியிலான வருவாயில் ¼ பகுதியாக (ரூ. 480 இலட்சங்கள்) விளங்குகிறது.

1974ஆம் ஆண்டு வாசனைத் திரவியங்களில் இருந்தும், பெருமளவு தயாரிக்கப்பட்ட கைத்தொழில் பொருட்களில் இருந்தும் கூடிய ஏற்றுமதி வருவாய்கள் ஈட்டப்பெற்றது. எனினும், இப்பொதுவான போக்கிற்கு மாறாக இரத்தினக் கற்கள், அவை சார்ந்த அருங்கற்களில் இருந்து ஈட்டப்பெற்ற ஏற்றுமதி வருவாய்கள் 1973ஆம் ஆண்டில் ரூ 1,400 இலட்சமாக விளங்கி 1974ஆம் ஆண்டில் ரூ. 1,000 இலட்சமாக வீழ்ச்சியடைந்தது 1974ஆம் ஆண்டு ஆரம்ப காலத்தில் எண்ணெய் விலை திடீரென உயர்வடைந்தமையைத் தொடர்ந்து. இரத்தினக்கற்கள் ஏற்றுமதிக்கான உயர்வான கேள்வியில் வீழ்ச்சி ஏற்பட்டது. மேலும் கைத்தொழிற் செழிப்பு வாய்ந்த நாடுகளில் கேள்வி வீழ்ச்சி அடையத் தொடங்கியது. இவ்வாண்டு நடுப்பகுதியில் இரத்தினக்கற் கைத்தொழில் ஏற்றுமதி வர்த்தகம், இத்தகைய பாதகமான நிலைமைகளை வெற்றி கொள்வது போன்ற அறிகுறிகள் காணப்பட்டாலும், இறுதி மூன்று ஆண்டுகளிலும் வீழ்ச்சியடையத் தொடங்கியது. கைத்தொழில் வளம் நிறைந்த மேற்கில் ஏற்பட்ட மாற்றத்தினால் பொருளாதார முயற்சிகள் துண்டிக்கப்பட்டமையினால் இவ்வாறு ஏற்பட்டிருக்கலாம். முழு ஆண்டு காலத்திலும் ஏற்றுமதி செய்யப்பட்ட அளவு பேணப்பட்டிருந்தாலும், குறைவான விலைகள் மொத்த வருவாயில் வீழ்ச்சி ஏற்படக் காரணமாயிற்று.

**(ii) இறக்குமதிகள்**

**(அ) பொது**

விவசாய உணவுப் பொருட்களின் பன்னாட்டுப் பற்றாக்குறைகளும், மூலப் பொருட்களது விலைகளில் ஏற்பட்ட செழிப்பும், 1974ஆம் ஆண்டு இறக்குமதிப் பட்டியலில் பிரதிபலிக்கப்பட்டுள்ளன. இது ரூ. 46,030 இலட்சமாகும். இது 1973ஆம் ஆண்டில் காணப்பட்ட ரூ. 26,440 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 80 சதவீதத்திற்கு மேலால் அதிகரித்துக் காணப்பட்டது. எல்லா இறக்குமதிப் பொருட்களின் அளவும், ஒரு குறிப்பிட்ட சில நானாவிதப் பொருட்கள் தவிர கணிசமானளவு குறைவாக இருந்தவேளையில், இத்தகைய அதிகரிப்பு ஏற்படுவதற்கு உயர்வான விலைகளே காரணமாகும். இறக்குமதி அளவுக் குறிகாட்டி (1967=100) 1973ஆம் ஆண்டில் 79 ஆக இருந்து 1974ஆம் ஆண்டில் 56 ஆக வீழ்ச்சியடைந்தது. உணவு இறக்குமதி அளவானது குறைவாக இருந்தமைக்கு அரிசி இறக்குமதி 10 சதவீதத்தாலும் சீனி இறக்குமதி 60 சதவீதத்தால் குறைந்தமையும் காரணமாகும். மேலும் நடுத்தர முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதி அளவுகள் கணிசமானளவால் வீழ்ச்சியடைந்தன.

இறக்குமதி விலைக்குறிகாட்டி (1967 = 100) 1973 ஆம் ஆண்டு 209 ஆக விளங்கி, 1974 ஆம் ஆண்டில் 370 ஆக உயர்வடைந்தது. பரந்த பிரிவாக நோக்குமிடத்து, இறக்குமதி உண்டியலில் உணவுப் பொருளானது அதிகரிப்பில் பெரிய பங்கு வகித்தபோதிலும் பெற்றோலியத்திற்கு மாத்திரமே, தனியான பொருட்கள் என்ற முறையில் ஆகக்கூடிய அதிகரிப்பு ஏற்பட்டது. இறக்குமதி செய்யப்பட்ட அளவில் கணிசமானளவு குறைவு காணப்பட்டபோதிலும், அரிசி, மா, சீனி என்பனவற்றின் இறக்குமதிச் செலவு 1973 ஆம் ஆண்டில் ரூ. 10,440 இலட்சமாக விளங்க, 1974 ஆம் ஆண்டில் ரூ. 17,690 இலட்சமாக விளங்கியது. இதற்குக் காரணமாக, இம்மூன்று பொருட்களின் விலைகள் அதிகரித்தமை காரணமாகும் அரிசி, ஒரு தொன்னுக்கு 1973ஆம் ஆண்டில் ரூ. 807 ஆக விளங்கி, 1974ஆம் ஆண்டில் ரூ. 2,461 ஆகவும், கோதுமை மா ஒரு தொன்னுக்கு 1973ஆம் ஆண்டில் ரூ. 1,144 ஆக விளங்க, 1974ஆம் ஆண்டில் ரூ. 2,132 ஆகவும், சீனி 1973ஆம் ஆண்டில் தொன்னுக்கு ரூ. 1,663 ஆகவும், 1974ஆம் ஆண்டில் ரூ. 2,847 ஆகவும் உயர்வடைந்தது.

குறிப்பிட்ட ஒரு இறக்குமதி இயல் அளவிற்குள் விலைகள் அதிகரித்தமையினுல் முக்கியமான நுகர்வுப் பொருட்களிலும், சில மூலப் பொருட்களிலும் ஏற்பட்ட உயர்வான செலவீட்டினுல், முதலீட்டுப் பொருட்களிலும் மூலதன உபகரண இறக்குமதிகளிலும் தவிர்க்க முடியாத நிலையில் தாக்கம் ஏற்பட்டது. மொத்த இறக்குமதிப் பட்டியல் இவ்வாண்டில் 80 சதவீதத்தால் அதிகரித்த வேளையில் மூலதனப் பொருட்கள் இறக்குமதியில், அதிகரிப்பு 20 சதவீதத்தால் ஏற்பட்டு ரூ. 4,600 இலட்சமாகியது.

**(ஆ) எண்ணெய் நிலைமை:**

மசகெண்ணெய்க்கான ஒரு பீப்பாவுக்கு 1973 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் அ. ஐ. டொலர்கள் 2 50 ஆக விளங்கி, 1974ஆம் ஆண்டு ஆரம்பத்தில் ஒரு பீப்பாவுக்கு (அராபிய மெல்லிய மசகெண்ணெய்) அ. ஐ. டொலர்கள் 10 65 ஆக பெற்றோலியம் ஏற்றுமதி செய்யும் நாடுகள் நிறுவனத்தினுல் நாலு மடங்காக உயர்த்தப்பட்டமையினுல், பெற்றோலியம், பெற்றோலியப் பொருட்களுக்கான இலங்கை இறக்குமதி உண்டியல் 1973ஆம் ஆண்டில் ரூ. 2,930 இலட்சமாக விளங்கி, 1974ஆம் ஆண்டில் ரூ. 9,050 இலட்சமாக உயர்வடைந்தது. பெற்றோலியத்திலான செலவீடு 1974ஆம் ஆண்டு இறக்குமதி உண்டியலில் 20 சதவீதத்தை எடுத்துக் கொண்டது. மசகெண்ணெய் விலையினுல் நேரடியாகத் தாக்கத்திற்குள்ளான உரத்தின் இறக்குமதிச் செலவுகள் இதே காலப்பகுதியில் ரூ. 1,375 இலட்சமாக இருந்து ரூ. 2,500 இலட்சமாக அதிகரித்தது.

உரத்திற்கான விலைகள் அதிகரித்தமையினுல் சென்மதி நிலுவையில் ஏற்பட்ட தாக்கம், விலை அதிகரிப்பினுல் இறக்குமதிப் பெறுமதியில் ஏற்பட்ட ரூ. 1,130 இலட்சங்கள் ஆகும். தூய்மையாக்கப்பட்ட பொருட்களில் செலவிடப்பட்ட தொகை சிறிதாக இருப்பதுடன், உள்நாட்டில் தூய்மையாக்கப்படுகின்றதும் பெருந்தொகையான பணம் சுத்திகரிக்கப்படாத எண்ணெய்ச் செலவு செய்தமையினுல், எண்ணெயைப் பொறுத்தவரையில் சரியான மதிப்பீடு செய்ய முடியாதுள்ளது. இதில் ஒரு பகுதி, வெளிநாட்டுக் கப்பல்களுக்கும், வானூர்திகளுக்கும் எரி பொருளாக மீண்டும் ஏற்றுமதி செய்யப்பட்டது. பிறிதொரு பகுதி உப பொருட்களாக, உதாரணமாக, நப்தாவாக ஏற்றுமதி செய்யப்பட்டது. 1974 ஆம் ஆண்டில் இம்மீள ஏற்றுமதிக்கள் ரூ. 3,500 இலட்சமாக மதிப்பிடப்பட்டுள்ளது. இப்பொருட்களின் இறக்குமதிச் செலவினைத் தீர்மானிப்ப

தற்கு, அதாவது, அந்த மீள ஏற்றுமதிகளிலான, சுத்திகரிக்கப்படாத எண்ணெய் அளவினை மதிப்பிடுவதற்கு மொத்த ஏற்றுமதிப் பெறுமதியானது உள்நாட்டில் சேர்க்கப்பட்ட பெறுமதிக்கேற்ப, மாற்றியமைக்கப்படல் வேண்டும். அத்தகைய ஒரு கணிப்பு, ஒரு தனிப்பட்ட சுத்திகரிக்கப்பட்ட பொருளை மாத்திரம் உற்பத்தி செய்வதற்கு வழியாக இல்லாமல், சுத்திகரிப்பு ஆலையில் உப பொருட்கள், சிலவற்றையும் ஏற்படுத்துவதனால் தொழில் நுட்பக் காரணங்களுக்காக அங்கீகரிக்கப்படவில்லை.

இறக்குமதி செய்யப்பட்ட சுத்திகரிக்கப்படாத எண்ணெயில் 60 சதவீதமே ஏறக்குறைய உள்நாட்டிற் பயன்படுத்தப்பட்டதென்ற அடிப்படையிலும், ஏனைய சுத்திகரிக்கப்பட்ட பொருட்களின் இறக்குமதிக்கேற்ப, மாற்றியமைக்கப்பட்ட பின்பு, சுத்திகரிக்கப்படாத எண்ணெய்க்கு ஏற்பட்ட கூடிய விலையினால் நேர்ந்த வர்த்தகக் குறைவானது, 1973ஆம் ஆண்டில் நிலவிய ரூ. 1,800 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1974ஆம் ஆண்டில் ரூ. 5,600 இலட்சமாகும். 1974ஆம் ஆண்டில் எண்ணெய், உரம் என்பவற்றிற்கான இறக்குமதிப் பட்டியலில் ஏற்பட்ட அதிகரிப்புகள் ஏறக்குறைய ரூ. 500 இலட்சமாகும் இத்தகைய நிலைமைதான் 1974ஆம் ஆண்டிற்கான வணிக வர்த்தகக் குறைவான ரூ. 12,270 இலட்சத்தில் ஏறக்குறைய அரைப்பகுதிக்கு மேல் காரணமாயிற்று. 1973ஆம் ஆண்டில் இக்குறை ரூ. 2,980 இலட்சமாக இருந்தது. எண்ணெய்க்கு விலை கூடியமையினால் இலங்கைச் சென்மதி நிலுவைகளில் ஏற்பட்ட மொத்த தாக்கத்தினை ஆராயுமிடத்து, அது மிகவும் பெரிதாகும். அதாவது மறைமுகத் தாக்கத்தினை நோக்குமிடத்து, கைத்தொழில் நாடுகளின் செலவு அமைப்பில் தாக்கத்தினை ஏற்படுத்தி, அதன் மூலம் தயாரிக்கப்பட்ட பொருட்கள் மூலதன இயந்திரங்கள், கப்பற் கட்டணங்கள் என்பவற்றின் செலவினை அதிகரிக்க, மறுபுறத்தில் இலங்கையின் இறக்குமதிகளின் கொ. கா. க. விலைகளை அதிகரித்தது.

## II. பணிகளும் மாற்றல்களும்:

இலங்கைச் சென்மதி நிலுவைக்கு 1973 ஆம் ஆண்டில் தெளிவான உதவியை வழங்கிய பணிகள் கணக்கானது, 1974ஆம் ஆண்டில் அதற்கு மேலால் உதவி வழங்கியது. தனிப்பட்ட மாற்றல்கள் உட்பட, பணிகள் கணக்கானது. ரூ. 750 இலட்சங்களை வழங்கியது. மேலும் அரசாங்க மாற்றுதல்களான ரூ. 2,540 இலட்சங்கள் சேர்க்கப்பட்டபொழுது, கட்புலனாகாக் கணக்கானது, தேறிய அடிப்படையில், ரூ. 3,280 இலட்சங்கள் கொண்ட மூல வளங்களை வழங்கியது. இத்தகைய சாதகமான விளைவுதான், வணிகக் கொடுக்கல் வாங்கல் கணக்கானது, ரூ 12,270 இலட்சங்கள் கொண்ட குறையைக் கொண்டிருந்தபோதிலும், நடைமுறைக் கணக்கிலான குறைவை, நடுத்தரமான முறையில் ரூ. 8,990 இலட்சங்கள் வரை கீழ்க் கொணர்ந்தது.

இத்தகைய முன்னேற்றமான போக்கு, அதிகரித்த கிடைப்பனவுகள் காரணமாகவே ஏற்பட்டது. (அட்டவணை II (ஏ) 4) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுமிடத்து 1974 ஆம் ஆண்டிற்கான கிடைப்பனவுகள் ரூ. 620 இலட்சத்தால் அதிகரித்தன. ஆனால், கொடுப்பனவுகள் ரூ. 440 இலட்சத்தால் அதிகரித்தன. கிடைப்பனவுகள் சுற்றுலாக் கைத்தொழில் (ரூ. 360 இலட்சங்கள்) வெளிநாட்டிலான முதலீட்டு வருமானம் (ரூ. 200 இலட்சங்கள்) என்பவற்றிலிருந்து அதிகரித்த வேளையில், செலவீட்டிலான அதிகரிப்புகள் குறிப்பாக, வட்டிக் கொடுப்பனவுகள் தனிப்பட்ட மாற்றுதல்களிலாகும்.

## அட்டவணை II (ஏ) 4

### 1973-இலும், 1974-இலும் பணிகள் கணக்கின் முக்கியமானதுறைகளில் ஏற்பட்ட மாற்றங்கள்

பத்து இலட்சம் ரூபாய்கள்

| | வரவு | | | பற்று | | | நிலுவை | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1973 | 1974 (அ) | மாற்றம் | 1973 | 1974 (அ) | மாற்றம் | 1973 | 1974 (அ) |
| துறைமுகப் பணிகள், ஏற்றியிறக்கல், காப்புறுதி ... | 177 | 173 | — 4 | 62 | 66 | + 4 | + 115 | + 107 |
| வெளிநாட்டுப் பயணம் ... | 59 | 95 | + 36 | 10 | 9 | — 1 | + 49 | + 86 |
| முதலீட்டு வருமானம் ... | 17 | 47 | + 30 | 127 | 148 | + 21 | — 110 | — 101 |
| (i) இலாபங்களும் பங்கிலாபங்களும் ... | 1 | — | — 1 | 19 | 14 | — 5 | — 18 | — 14 |
| (ii) வட்டி ... | 16 | 37 | + 31 | 108 | 134 | + 26 | — 92 | — 87 |
| அரசாங்கச் செலவினம் ... | 33 | 33 | — | 20 | 25 | + 5 | + 13 | + 8 |
| பல்வகைப் பணிகள் ... | 103 | 107 | + 4 | 115 | 120 | + 5 | — 12 | — 13 |
| தனியார் மாற்றல்கள் ... | 48 | 54 | + 6 | 46 | 56 | + 10 | — 2 | — 2 |
| மொத்தம் ... | 437 | 509 | + 72 | 380 | 424 | + 44 | + 57 | + 85 |

(அ) தற்காலிகமானவை.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

**(அ) துறைமுகம், போக்குவரத்து, காப்புறுதி.**

அட்டவணை II (ஏ) 4 இல் உள்ள துறைமுகம், போக்குவரத்து, காப்புறுதி என்பவை, கப்பற் கூலி, வணிசக் காப்புறுதி, பிரயாணிகள் கப்பற் கூலி, துறைமுகக் கிடைப்பனவுகளும் செலவுகளும் நானுவித விடயங்கள் என்பவற்றைக் கொண்டுள்ளது. இக்கணக்கானது, கொடுப்பனவுகளிலும் மேலாகக் கிடைப்பனவுகள் காணப்பட்டுத் தொடர்ந்து மிகைகள் இருந்தமையினுல், சென்மதி நிலுவைக்குக் கணிசமானளவில் உதவியினை வழங்கியது. மேலும் கடந்த காலங்களில் நடைமுறைக் கணக்கிலான குறையானது, வழக்கமாக வர்த்தகக் குறைவிலும் கீழாக இருந்தமைக்கான இரண்டு முக்கிய காரணங்களில் இதுவும் ஒன்ருகும். (நன்கொடைகள் கிடைப்பனவு மற்றைய காரணமாகும்) இத்தகைய நிலைமை மாறிக்கொண்டு போனதுடன், 1974ஆம் ஆண்டில் இதனை எடுத்துக் காட்டுகின்ற அறிகுறிகள் காணப்பட்டன. (i) நாட்டில் வசிப்பவர்கள் வெளிநாட்டுப் பிரயாணங்களுக்காக, வெளிநாட்டு வானூர்திகள், கப்பல்களைப் பயன்படுத்துவதன் மூலம் பிரயாணக் கூலிச் செலவுகள் கொடுப்பனவுகள் அதிகரித்தமையும், 1974 ஆம் ஆண்டில் இக்கணக்கிலான மொத்தக் கொடுப்பனவில் 1/3 பகுதி (ரூ. 230 இலட்சங்கள்) உள்நாட்டுக் கப்பல்களின் இயக்கங்களை அபிவிருத்தி செய்வதன் மூலம் அத்தகைய கப்பல்களினுல் வெளிநாட்டுத் துறைமுகங்களில்[1] ஏற்படுகின்ற செலவுகள் என்பனவும் இக்கணக்கிலான மிகையை ஒரு குறிப்பிட்டளவுக்கு மிதமாக்கக்கூடும் துறைமுகச் செலவின்கீழ் உள்ளடக்கப்பட்ட (பற்று) இவ்விடயமானது, 1973 ஆம் ஆண்டில் ரூ 110 இலட்சமாக விளங்கி, 1974 ஆம் ஆண்டில் ரூ. 60 இலட்சமாக அதிகரித்தது. மேலும் சென்மதி நிலுவையில் இக்கணக்கின் முக்கியத்துவம் வீழ்ச்சியடைவதற்கான, சுற்றுலாக் கைத்தொழிலின் வளர்ச்சியாகும்.

**(ஆ) சுற்றுலாக் கைத்தொழில்:**

1974ஆம் ஆண்டில் தொடர்ந்தும் 3வது வருடமாக சுற்றுலாக் கைத்தொழிலிலான வருவாய்கள் அதிகரித்தன. இவ்வாண்டிலான மொத்த வருவாய்கள் 1973 ஆம் ஆண்டு மட்டத்திலும் 50 சதவீதத்தால் அதிகரித்து ரூ 950 இலட்சமாகியது. முன்னைய ஆண்டுகளைப்போல கூடியளவு பிரயாணிகள் வந்தமை, இலங்கையில் செலவு செய்த ஒரு ஆளுக்கான தொகை அதிகரித்த கூட்டுக் காரணங்களினுல் இவ்வருவாய் ஏற்பட்டது.

அண்மைக் காலங்களில் காணப்பட்ட பெருமளவிலான பிரயாணங்கள் வரவுப் போக்கானது, 1974ஆம் ஆண்டிலும் காணப்பட்டது. நாட்டிற்கு வந்த மொத்த உல்லாசப் பயணிகள் எண்ணிக்கை 85,000 ஆகி இதுவரை காலம் பதிவு செய்யப்பட்ட தொகைகளில் ஆகக் கூடியதாகும். ஒரு முக்கிய பண்பென்னவெனில், 1974 ஆம் ஆண்டில் உலக நாடுகளின் உல்லாசப் பயணிகள் எண்ணிக்கை குறைவடைந்த போதிலும், இலங்கைக்கு வந்தவர்களின் எண்ணிக்கையில் கணிசமான அதிகரிப்பு இருந்தது. பின்கூறப்பட்ட காரணியைத் தவிர, 1974ஆம் ஆண்டில் வருவாயில் ஏற்பட்ட பெரிதளவு அதிகரிப்புக்குச் சுற்றுலாப் பணிச் செலவுகள் அதிகரித்தமையினுல் தலைக்கான செலவீடு உயர்வான மட்டத்தினை அடைந்தமையும் காரணமாகும்.

---

1. மேலும் இக்கணக்கானது, வெளிநாட்டவர்களுக்குச் சரக்குகள் காவிச்செல்வதன் மூலம், வருவாய்கள் உள்நாட்டுக் கப்பற் கொம்பனிகள் பெற்ற கப்பற் கூலிகளையும் இது சேர்த்துக் கொள்கின்றது (விடயம், வரவு, பிற்சேர்க்கை அட்டவணை 44) எவ்வாருயிருப்பினும், உள்நாட்டுக் கப்பற் கொம்பனிகள், உள்நாட்டவர்களுக்குச் சரக்குகள் காவிச் செல்வதற்கான காரணத்தினுல் இந்நாட்டிற்காகச் சேமிக்கப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியின் அளவினை இது காட்டவில்லை. உதாரணமாக, உணவு ஆணையாளர் வெளிநாட்டுக் கப்பல்களில் காவிச் சென்றதற்கு வெளிநாட்டுச் செலாவணியில் பணம் இறுத்தல் வேண்டும்.

1974ஆம் ஆண்டில் சுற்றுலாக் கைத்தொழில் வருவாயாலேற்பட்ட மொத்த வளர்ச்சியும், மட்டமும், ஆர்வமூட்டுவனவாக இருந்தாலும், வருட முடிவில் நோக்கிக் காணப்பட்ட விளைவு, அவ்வளவு சாதகமாக இருக்கவில்லை. கலண்டர் ஆண்டு முறையில் நோக்குமிடத்து, சுற்றுலாக் கைத்தொழிற் காலம் சனவரி தொடக்கம் ஏப்பிரல் மட்டும், ஒக்ரோபர் தொடக்கம் திசெம்பர் வரைக்கும் உளது. சனவரியிலிருந்து ஏப்பிரல் காலப் பகுதியில் மாதாந்தச் சராசரி வருவாய்கள் ரூ. 110 இலட்சங்களாக விளங்கி, மே மாதத்தில் இருந்து செத்தெம்பர் மாத கால மந்த காலப்பகுதியில் 60 இலட்சங்களாகக் குறைவடைந்தது. திரும்பவும் காற் பகுதியில் அதாவது, ஒக்ரோபர் தொடக்கம் வருவாய் அதிகரிக்கவில்லை. இறுதிக் காற்பகுதியில் மாதாந்தச் சராசரி வருவாய் ரூ. 70 இலட்சமாகும் சக்தித் தட்டுப்பாடு, பணவீக்கம் கைத்தொழில் நாடுகளிலான மந்தம் என்பவை சேர்ந்து செலவு அதிகரித்தமையினால் பன்னாட்டுச் சுற்றுலாக் கைத்தொழில் ஏற்பட்ட தாக்கம் இலங்கையிலும் பாதிப்பினை ஏற்படுத்துவது போலத் தோன்றுகின்றது முக்கியமான சுற்றுலாப் பயணிகள் வருகின்ற (வட அமெரிக்கா, மேற்கு ஐரோப்பா, யப்பான்) முக்கிய பகுதிகளில் இருந்து இலங்கை தூரத்தில் இருப்பதனால் போக்குவரத்துச் செலவு காரணமாக இந்நாடுகளில் இருந்து வருகின்ற எண்ணிக்கை பாதிக்கப்படக்கூடும். இத்தகைய ஒரு நிலைமை, இலங்கைக் கொள்வனவு பூரணமாக அபிவிருத்தி செய்யப்பட்ட நிலைமையில் ஏற்படுகின்றமையால், இலங்கையின் சுற்றுலாக் கைத்தொழிலை மோசமான நிலைக்கு உள்ளாக்கும்.

**(இ) முதலீட்டு வருமானம்**

முதலீட்டு வருமானத்திலான கிடைப்பனவுகள், பெருமளவுக்கு வெளிநாட்டிலுள்ள பணச்சந்தையில் வெளிநாட்டுச் சொத்துக்களை முதலீடு செய்வதன்மூலம் ஈட்டிய வட்டி வருமானங்களை எடுத்துக்காட்டுகின்றன. இத்தகைய முதலீடுகள் வெளிநாட்டு வங்கிகளில் திரவத்தன்மையில் உள்ள வைப்புக்களையும், நீண்டகால தவணைப் பணங்களையும் உள்ளடக்குகின்றன. கடந்த பல ஆண்டுகளாகக் காணப்பட்ட சராசரியிலும் பார்க்க மேல்மட்டத்தில் 1974ஆம் ஆண்டிற்கான மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் காணப்பட்டமையினால் அத்தகைய முதலீடுகள் செய்யக்கூடியதாக இருந்தது. மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் 1973ஆம் ஆண்டு ஆவணி மாதத்தில் ரூ. 6,500 இலட்சங்களாக விளங்கி 1974ஆம் ஆண்டு பெப்புருவரி / மாச்சு மாதத்தில் ரூ. 10,009 இலட்சங்களாக அதிகரித்தது. பின்பு யூலை மாத முடிவில் ரூ. 7,770 இலட்சங்களாகக் குறைவடைந்து, திரும்பவும் இறுதி மாதங்களில் ரூ. 10,000 இலட்சங்களுக்கு மேலால் அதிகரித்தது. இவ்வாறு வெளிநாட்டுச் சொத்துக்கள் நிலையாக உயர்ந்த மட்டத்தில் இருந்தமையினால், அத்தகைய சொத்துக்களில் இருந்து மத்திய வங்கி, போதியளவு வெளிநாட்டு வருமானம் பெறுவதற்கு வழியாயிற்று.

முதலீட்டு வருமானத்தில் இருந்து வெளியனுப்பப்பட்ட தொகைகள் இலங்கையில் முதலீட்டப்பட்ட வெளிநாட்டு மூலதனங்களிலான வெளியனுப்பல் இலாபங்களையும், வெளிநாட்டுக் கடன்களிலான வட்டிக் கொடுப்பனவுகளையும் கொண்டுள்ளது. பின்கூறப்பட்ட பகுதியைச் சேர்ந்த கொடுப்பனவுகள், எமது வெளிநாட்டுக் கடன்பாடுகளால் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாகிவிட்டன. வெளிநாட்டுத் தனியார் முதலீட்டிலான வெளியனுப்பல்களை

வட்டிக்கொடுப்பனவுகள், பூரணமாக மறைத்துவிட்டன. வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்ட இலாபங்கள், பங்கிலாபங்கள் என்பவற்றின் தொகை 1969 ஆம் ஆண்டில் ரூ. 520 இலட்சங்களாக விளங்கி 1974ஆம் ஆண்டில் ரூ. 140 இலட்சங்களாகக் குறைவடைந்தது. அதேநேரத்தில் இதே காலப்பகுதியில் வெளிநாட்டுக் கடன்களிலான வட்டிக்கொடுப்பனவுகள் ரூ. 580 இலட்சங் களாக விளங்கி ரூ. 1,340 இலட்சங்களாக பெருமளவால் அதிகரித்தன இவ்வாறாக 1974ஆம் ஆண்டில் வட்டிக் கொடுப்பனவுகள் இக்கணக்கிலான வெளிச்செல்கையில் 90 சதவீதத்தினைக் கொண்டிருந்தன.

(ஈ) அரசாங்க மாற்றுதல்கள்

கடந்த எந்த வருடங்களிலும் பார்க்க வெளிநாட்டு அரசாங்கங்களில் இருந்து கிடைக்கப்பெற்ற நன்கொடைகள் ரூ 2,540 இலட்சமாக அமைந்து உயர்வாகக் காணப்பட்டபோதிலும், நடைமுறைக் கணக்கிலான குறையின் கவரும் அளவு, இலங்கைச் சென்மதி நிலுவையிலான குறைவை வீழ்ச்சியடையச்செய்வதற்கு இத்தகைய நன்கொடைகள்மூலம் நிதியிடும் முக்கியத்துவத்தின் தன்மை குறைந்து காணப்பட்டது. 1971ஆம் ஆண்டிலிருந்து 1973ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் நடைமுறைக் கணக்கிலான குறை நன்கொடையில் இருந்து செய்யப்பட்ட நிதியுதவியினால் பங்காகக் குறைவுற்று 1974ஆம் ஆண்டில் 21 சதவீதமாகக் குறைவடைந்தது. நன்கொடையிலான பெரும் பகுதி (90 சதவீதம்) உணவு உதவியாகக் காணப்பட்டது. கோதுமை மாவிலான நன்கொடை ரூ 1,230 இலட்சம் கொண்டதாகவும், அரிசி ரூ. 900 இலட்சம் பெறுமதியுடையதாகவும் விளங்கின. முக்கிய நன்கொடை நாடாக மக்கள் சீனக் குடியரசு விளங்கியது. ஏனைய முக்கிய நன்கொடை நாடுகளாக சேர்மன் இணைப்புக் குடியரசு, அவுத்திரேலியா, கனடா என்பன விளங்கின.

## III. குறைவை நிதியிடல்

வெளிநாடுகளுக்குச் செய்த ஏற்றுமதிகள், சேவைகள் மூலம் ஈட்டிய வருமானத்திலும் மேலாக, வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்த பொருட்கள் சேவைகளுக்கு செலுத்திய கொடுப்பனவுகள் மேலதிகமாகக் காணப்பட்டமையினால் நடைமுறைக் கணக்கிலான குறையானது பண சம்பந்தமல்லா மூலதனத் துறையினதான கொடுக்கல் வாங்கல் மூலமும், பண சம்பந்தமான அசைவுகள் மூலமும் சாதாரணமாக நிதியீடு செய்யப்பட்டது. பண சம்பந்தமல்லாத மூலதனத்துறையிலிருந்து செய்த நிதியீடு முழுவதும் இலங்கையைப் பொறுத்தவரையில் மத்திய அரசாங்கத்திற்கு வெளிநாட்டு அரசாங்கங்களால் வழங்கிய பண்ட, திட்டக் கடன்களையும் குறுங்கால, நிரம்பலர்கள் கடன்கள் வசதிக்குக் கீழான இறக்குமதிக் கடன்களையும் கொண்டது. வரலாற்றுப்போக்கில் நோக்குமிடத்து, தனியார் மூலதனம் சென்மதி நிலுவைக்கு ஒருவிதமான உறுதியையும் வழங்கவில்லை. பண சம்பந்தமான அசைவுகள் மத்திய வங்கியினதும், வர்த்தக வங்கிகளினதும் இருப்புச் சொத்துக்கள், பொறுப்புக்களில் ஏற்பட்ட மாற்றங்களையும், பணத்திற்கான பண்புகள்கொண்ட மத்திய அரசாங்கத்தின் இருப்புச் சொத்துக்கள் பொறுப்புக்கள் ஆகியவற்றில் ஏற்பட்ட மாற்றங்களையும் கொண்டுள்ளது. இத்துறையானது, சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்குக் குறைக்கு சொத்துக்களைக் குறைப்பதன்மூலமும் அல்லது வெளிநாடுகளில் மொத்தப் பொறுப்புக்களை அதிகரிப்பதன் மூலமும் (உதாரணமாக பன்னாட்டு நாணய நிதியில் இருந்து கொள்வனவு செய்தல் அல்லது வெளிநாட்டு வங்கிகளில் இருந்து கடன்பெறல்) அல்லது இரு வழிகளாலும் நிதியீடு செய்யலாம்.

1969ஆம் ஆண்டில் ஏற்பட்ட மிக உயர்ந்த நடைமுறைக்கணக்குப் பணக் குறையைத் தொடர்ந்து சென்மதி நிலுவையை அவதானித்துக் கவனஞ் செலுத்தியமையால், இப்பணக்குறை தளராது குறிப்பிடத்தக்களவு குறை வுற்றது. இது, 1973ஆம் ஆண்டுவரை பணமல்லா மூலதனத்தை துறைக் கொடுக்கல் வாங்கல்கள் - அதாவது அரசாங்கத்தினதும், தனியார் துறையினதும் நீண்ட காலக் குறுகிய காலக் கடன்கள் - பணக் குறையை முற்றிலும் ஈடுசெய்ததோடல்லாமல் நாடு வெளிநாட்டுச் சொத்துக்களைத் திரட்டுவ தற்கும் வழி வகுத்ததவென்பதற்கு உறுதியளித்தது. 1971ஆம் ஆண்டில் தேறிய நீண்ட தவணை மூலதனத்தினால் நிதியீடுசெய்யப்பட்ட நடைமுறைக் கணக்குப் பணக்குறையின் பங்கு 186 சதவீதமாகும்; 1972இலும், 1973இலும் முறையே 148 சதவீதமாகவும், 128 சதவீதமாகவும் விளங்கியது. வெளிநாட்டு இருப்புச் சொத்துக்கள் 1971இல் ரூ. 4030 இலட்சமாகவிருந்து, 1973இல் ரூ. 8510 இலட்சமாகத் தளராது அதிகரித்தன. குறுந்தவணைக் கொடுகடன்களை அளவிற்கு மிஞ்சி நாடுதல், குறைந்தளவு முதிர்ச்சிக் காலமுள்ள வெளி நாட்டுக் கடன்கள் போன்ற இத்தகைய சில நிதியுதவி வகைகள் விரும்பத் தக்கனவல்ல என்பது உண்மை; மறுபுறம் இக்கொடுகடன்களிற் சில இருப்புச் சொத்துக்களைத் திரட்டுவதற்கு உதவிபுரிந்தனவென்று கூறலாம். ஆகவே, 1970–73 ஆகிய நான்கு ஆண்டு காலப்பகுதியில் நிதியுதவி செய்த முறையை முழுமையாக நோக்கின் நடைமுறைக் கணக்குக் குறையானது முற்றிலும் பணமல்லா மூலதனத்துறைக் கொடுக்கல் வாங்கல்களிலிருந்து நிதியீடுசெய்யப் பட்டது. பண அசைவுகளால் நிர்ணயிக்கப்படும் நாட்டின் தேறிய வெளி நாட்டுச் செலாவணி இருப்புச் சொத்துக்களின் நிலை 1969இல் ரூ 7260 இலட்சத்திலிருந்து 1973 திசெம்பரில்[1] ரூ. 3670 இலட்சமாக அதிகரித்தது. இச்செலாவணி நிலையை மத்திய வங்கியினதும் வர்த்தக வங்கிகளினதும் வெளிநாட்டு இருப்புச்சொத்துக்களும் அரசாங்க இருப்புச் சொததுக்களுக்கும் இடையில் உள்ள வேறுபாடும், மறுபுறம் மத்திய வங்கியினதும் வர்த்தக வங்கிகளினதும் பொறுப்புக்களுக்கும் அரசாங்கப் பொறுப்புக்களுக்கும் [1] இடையில் உள்ள வேறுபாடும் என வரையறை செய்யப்பட்டுள்ளது.

1974இல் இப்போக்குகள் குறிப்பிடத்தக்களவு மாற்றமுற்றன. இதற்கு அதிகரித்த இறக்குமதி உண்டியல்களினால் நடைமுறைக் கணக்குப் பணக் குறையில் ஏற்பட்ட மிகப் பெருமளவு அதிகரிப்பே முக்கிய காரணமாகும். நீண்ட தவணைக் கடன்கள், குறுந் தவணைக் கடன்கள் நிரம்பலர் கொடுகடன்கள் (மீளக் கொடுப்பனவுகளை நீக்கி) ஒருமித்து 1974இல் ரூ. 5,700 இலட்சம் கொண்ட உள்வருகைக்குக் காரணமாயிருந்தன. இத்தொகை இவ்வளவு காலமும் பதிவுசெய்யப்பட்ட தொகையிலும் பார்க்க ஆகக் கூடிய தொகையாக விளங்கியபோதும், இது ரூ. 3,500 இலட்சம் கொண்ட நிரப்பப்படாத இடை வெளியைக் காட்டியது. இது பண அசைவுகள் மூலம் நிதியீடு செய்யப்பட்டது. இவை ப. நா. நி. இலிருந்து பெற்ற அதிகரித்த கடன்பாடாகவும், இலங்கை இருபுடை வர்த்தகக் கொடுப்பனவு ஒப்பந்தங்களுடைய நாடுகளில் அதிகரித்த அளவில் நாடும் கொடுகடனாகவும் அமைந்தன.

---

* இக்கோட்பாட்டிலிருந்து அரசாங்கத்திற்கான நீண்ட தவணைக் கடன்கள், குறுந்தவணைக் கடன்கள் நிரம்பலர் கொடுகடன்கள் ஆகியன நீக்கப்பட்டுள்ளன.

1. சய அடையாளம், பொறுப்புக்களிலும் பார்க்க இருப்புச்சொத்துக்கள் மேலாக விளங்குவதையும், சுக அடையாளம் இருப்புச்சொத்துக்கள் பொறுப்புக்களிலும் பார்க்க மேலாக விளங்குவதையும் குறிக்கின்றது.

ப. நா. நி. இலிருந்து பெற்ற உதவி, பெருமளவுக்கு 1974யூன் 14இல் நிறுவிய எண்ணெய் வசதியிலிருந்து பெறப்பட்டது இவ்வசதியின் கீழ் எண்ணெய் இறக்குமதிகளின் விலை அதிகரிப்புக்களினால் சென்மதி நிலுவை மீது ஏற்படும் பாதக விளைவுகளைத் தணிப்பதற்கு உதவிபுரியும் நிமித்தம், ப. நா. நி. அங்கத்துவ நாடுகளுக்கு பொருள் வளங்கள் கிடைக்கத்தக்கதாகச் செய்வதென முடிவுசெய்தது. இவ்வசதியின் கீழ் எடுப்பனவு செய்யும்போது உதவி பெறும் ஏனைய நாடுகளுடன் இலங்கை (அ) தனது சென்மதி நிலுவைப் பிரச்சினைகளுக்கு தகுந்த முடிவுகளை எடுப்பதற்கு ப. நா. நிதியுடன் ஒத்துழைப்பதற்கும் (ஆ) ஏனைய நாடுகளின் சென்மதி நிலுவைப் பிரச்சினைகளை அதிகரிக்கும் கொள்கைகளைப் பின்பற்றுவதைத் தடுக்கும் முறையில் தன் பன்னாட்டுக் கொடுப்பனவுகளை நடாத்துவதாகவும் பொறுப்பேற்றுள்ளது. 1974ஆம் ஆண்டில் இரு எடுப்பனவுகள் மூலம் சென்மதி நிலுவைக்காக ரூ. 2,710 இலட்சம் (சி. எ. உ. 340 இலட்சம்) கொண்ட கூட்டுத் தொகை கிடைக்கத்தக்கதாகவிருந்தது. எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகளிலிருந்து ப நா. நிதியே இவ்வெண்ணெய் வசதியை நிதியிட கடன்பெற வேண்டியிருந்தமையால், வட்டி வீதம் ஆண்டொன்றுக்கு 7 சதவீதமாக இருந்தது இவ்வீதம் ஏனைய எடுப்பனவுகளின் மீது அறவிடும் ஆண்டொன்றிற்கு 4–6 சதவீதத்திலும் பார்க்க உயர்வுற்றிருந்தது. ப. நா. நிதியிலிருந்து பெற்ற ஏனைய எடுப்பனவுகள் இவ்வாண்டின் முற்பகுதியில் பேச்சுவார்த்தைகள் செய்த துணைநிலைஉடன்படிக்கையினால் கிடைக்கப்பெற்றன.

சென்மதி நிலுவையை நிதியீடு செய்வதற்கு இருபுடை வர்த்தகக் கொடுப்பனவு உடன்படிக்கைகளின் உதவுதொகைகளின் எண்தொகைகள் பின்வருமாறு அமைந்துள்ளன.

ப. இ ரூ.

| | 1974 சன. 1 | 1974 திசெ. 31 | தேறிய மாற்றம் |
|---|---|---|---|
| இருபுடை வர்த்தகப் பங்காளிகளிலிருந்து இலங்கைக்குக் கிடைக்கவேண்டிய தொகைகள் ... | 97.1 | 26.6 | – 70.5 |
| இலங்கையிலிருந்து இருபுடை வர்த்தகப் பங்காளிகளுக்குக் கிடைக்கவேண்டிய தொகைகள் ... | 42.4 | 209.3 | –166.9 |
| (இவற்றில் சீனு) ... | (33.8) | (158.5) | (–124.7) |

இருபுடை வர்த்தகம் குறிப்பாக பல்வேறு பண்டப் பொருட்களை உள்ளடக்குவதுடன் இந்நாடு இறக்குமதிகளை அதிகரித்து கொடுகடன் நிலுவைகளைக் குறைக்கும் விருப்புரிமையை வழங்கியுள்ளதால் இலங்கையின் சார்பில் பெருமளவு கொடுகடன் நிலுவைகள் திரட்டுதலை ஏற்பது பொருத்தமற்றது. (இது இலங்கை நிதி வசதிகள் அளிப்பதற்குச் சமமாகும்) என்று முன்னைய ஆண்டறிக்கையில் எடுத்துக் கூறப்பட்டுள்ளது அரிசி இறக்குமதிகளையும், இறப்பர் ஏற்றுமதிகளையும் முக்கியமாக உள்ளடக்கும் இலங்கை / சீனு ஒப்பந்தம் சிறப்புப் பகுப்பில் உள்ளது. ஏனைய இருபுடை வர்த்தகக் கொடுப்பனவுகளின் தொடர்பான குறிப்புக்கள் இவ்வுடன்படிக்கைக்குப் பொருந்துவனவல்ல. 1971/72 இல் இலங்கை / சீனுக் கணக்கு நிலுவை இலங்கைக்குச் சாதகமாக அமைந்து அதன்பின் அரிசி இறக்குமதிகளின் பெறுமதி இறப்பர் ஏற்றுமதிகளின் பெறுமதியைவிட உயர்ந்து விளங்கியமையால் இந்நிலுவை பாதகமாக அமைந்துள்ளது. மேலேயுள்ள எண்தொகைகளில் காட்டியவாறு, இது நடைமுறைக் கணக்குப் பணக்குறைவை நிதியிடுவதில் பெறுமதியுள்ள ஒரு மூலமாக அமைந்துள்ளது.

எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகளிலிருந்து பெறும் உதவி 1974இல் சென்மதி நிலுவைகளை நிதியீடு செய்யும் ஒரு புதிய மூலமாக அமைந்துள்ளது. இது குவெற் நாணய அதிகாரத்திலிருந்து 2 ஆண்டுகளில் திருப்பிக் கொடுக்கக் கூடியதாக மத்திய வங்கிக்கு நேரடியாகக் கொடுத்த ஐ. அ. 210 இலட்ச (ரூ. 1,370 இலட்சம் பணக் கடனைக் கொண்டுள்ளது. அடுத்த ஓராண்டிலோ இரண்டு ஆண்டுகளிலோ பங்குபற்றும் நாடுகளின் எண்ணிக்கை அதிகரிப்பதனுல் இம்மூலத்திலிருந்து பெறும் உதவியின் அளவு முக்கியத்துவத்தில் அதிகரிக்கக் கூடியதாயிருப்பினும், இந்நாடுகள் மேலும் கொடுகடன் வழங்கும் அளவில் உச்ச வரம்பை அடையலாம் இந்நாடுகளில் இப்போது நடைபெறும் தீவிர அபிவிருத்தித் திட்டங்களும், மறுபுறம் நுகர்வு நாடுகளினுல் எண்ணெய் பாதுகாக்கும் நடவடிக்கைகளைச் செயற்படுத்துவதும், எண்ணெய்க்காகவும், எண்ணெயின் பதிலீடுகளுக்காகவும் மேலதிக மூலங்களைத் தேடுவதும் மேலதிக எண்ணெய் நிதிகளின் தொகையைக் குறைக்கச் செய்யும். ஆகவே, கிடைக்கத்தக்க மூல வளங்களுக்கு ஏற்பவே சென்மதி நிலுவைப் பணக்குறைகள் வைத்திருக்க வேண்டிய முக்கியத்துவத்தை மிகைபட வற்புறுத்தத் தேவையில்லை.

வெளிநாட்டுச் செலாவணி இடைவெளியை இந்நாணய அசைவுகள் நிதியிடுவதன் விளைவால் தேறிய வெளிநாட்டுச் செலாவணி இருப்புச் சொத்துக்களின் நிலை 1974ஆம் ஆண்டு தொடக்கத்தில் ரூ. 367 இலட்சத்திலிருந்து ஆண்டிறுதியில் ரூ. 2,794 இலட்சமாகக் குறைவுற்றது - ரூ. 3,163 இலட்சம் கொண்ட பாதக விளைவாகும்

**(ஆ) செலாவணி வீத அமைப்பு**

1972 யூலை தொடக்கம் இலங்கை ரூ. 15.60 = 1 பவுண் ஸ்ரேலிங் வீதத்தில் இலங்கை ரூபா பவுண் ஸ்ரேலிங்குடன் இணைக்கப்பட்டு செலாவணி

**அட்டவணை II (ஏ) 5**

**வெளிநாட்டு நிதிவள இடைவெளியை நிதியீட்டும் வழிமுறைகள் 1973 – 1974**

| வழிமுறைகள் | 1973 | | 1974 (அ) | |
|---|---|---|---|---|
| | ப. இ. ரூ. | சதவீதப் பங்கு | ப. இ. ரூ. | சதவீதப் பங்கு |
| நிதிவள இடைவெளி | −1,523 | | − 2,516 | |
| நிதியீட்டல் | + 1,523 | 100.0 | + 2,516 | 100.0 |
| 1. வெளிநாட்டுச் சொத்துக்கள் | — 125 | 8.2 | − 38 | − 1.5 |
| 2. வெளிநாட்டு வங்கிக் கடன்பாடுகள் | — | — | 16 | 0.6 |
| 3. ப. நா. நி. எடுப்பனவுகள் | 137 | 9.0 | 106 | 4.2 |
| 4. எண்ணெய் வாய்ப்பு எடுப்பனவுகள் | — | — | 271 | 10.8 |
| 5. இருபுடை வணிக நிலுவைகள் | 35 | 2.3 | 167 | 6.6 |
| 6. குறுகியகால வணிகக் கொடுகடன்கள் | 781 | 51.3 | 836 | 33.2 |
| 7. நிரம்பல் செய்வோர் கொடுகடன் | 240 | 15.8 | 429 | 17.1 |
| 8. பண்ட உதவி | 210 | 13.8 | 328 | 13.0 |
| 9. செயற்றிட்ட உதவி | 125 | 8.2 | 103 | 4.1 |
| 10. கொடைகள் | 83 | 5.4 | 254 | 10.1 |
| 11. தனியார் மூலதனம் | 6 | 0.4 | 12 | 0.5 |
| 12. ஏனைய | 14 | 0.9 | 16 | 0.6 |
| 13. சிறப்பு எடுப்பனவு உரிமைகள் | — | — | — | — |
| 14. பிழைகளும், தவறுகளும் | 17 | 1.1 | 16 | 0.6 |

(அ) தற்காலிகமானவை.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

வீத அமைப்பு பவுண் ஸ்ரேலிங்கிற்கான இவ்வரசாங்க வீதத்தை அடிப்படையாகக் கொண்டு விளங்கியது. ஐ. அமெரிக்க டொலர் உட்பட, இலங்கை வர்த்தகத்திற்கு முக்கியமான ஏனைய நாணயங்களுக்கான செலாவணி வீதங்கள், காலத்திற்குக் காலம் அந்நாணயங்களுக்கான இலண்டன் சந்தை வீத அடிப்படையில் மத்திய வங்கியினால் நிர்ணயிக்கப்படுகின்றன. ஏனைய வெளிநாட்டு நாணயங்களுக்கான வீதங்கள் இங்கிலாந்து வங்கியினால் எடுத்துக்கூறப்பட்ட இலண்டன் சந்தை வீதங்களின் அடிப்படையில் வர்த்தக வங்கிகளினால் நிர்ணயிக்கப்படுகின்றன. 1974ஆம் ஆண்டில் ஐக்கிய அமெரிக்க டொலர் உட்பட அநேக நாணயங்களுக்கு எதிராக, இலங்கை ரூபா மிகைமதிப்புற்றது. அவுத்திரேலியன் டொலர், யப்பானிய யென், நியூசீலாந்து டொலர், இற்றாலியன் லீரு ஆகியவற்றைப் பொறுத்தவரை ஆண்டிறுதியில் உள்ள வீதத்தின் மாற்றத்தை ஆண்டுத் தொடக்க அளவுடன் ஒப்பிடுகையில் மிகக் குறிப்பிடத்தக்களவாக விளங்கியது. சென்றாண்டு ஏனைய வெளிநாட்டு நாணயங்களுடன் ஒப்பிடுகையில் இலங்கை ரூபாவில் ஏற்பட்ட சாதாரண மிகைக் குறைப்பை நோக்குகையில் 1974இன் செலாவணி வீதம், பொதுப்படையாக நோக்கின் ஏனைய வெளிநாட்டு நாணயங்களுக்கெதிராக 3 சதவீத மிகை மதிப்பைக் காட்டியது.

இவ்வரசாங்கச் செலாவணி வீதத்தில் எல்லா வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்களும் நடைபெறுவதில்லை. 1968 மேயில் வெளிநாட்டுச் செலாவணி உரிமைச் சான்றிதழ்த் (வெ. செ. உ சா.) திட்டம் கொண்டு வந்தது முதல், சில ஏற்றுமதிப் பொருட்களும், அதிகரித்த வகை இறக்குமதிப் பொருட்களும், கட்புலனாகாக் கொடுக்கல்வாங்கல்களும் அரசாங்க வீதத்திலும் 64 சதவீதம் மேலான வீதத்தில் தற்போது கொடுக்கல்வாங்கல்கள் நடைபெறும் வேறோர் செலாவணிச் சந்தையில் நடைபெறுகின்றன. பெறுகைகள் பகுதியில் தேயிலை, இறப்பர், தெங்குப் பொருள் (எண்ணெய், தேங்காய்த் துருவல், கொப்பரா) ஏற்றுமதிகள் தவிர்ந்த ஏனைய எல்லா ஏற்றுமதிப் பொருட்களும், தூதுவர் கணக்குகள் தவிர்ந்த கட்புலனாகாக் கொடுக்கல் வாங்கல்களும் மிகை வீதச் செலாவணிக்குத் தகைமையுடையவையாக விளங்கின. கொடுப்பனவுகள் பகுதியில் அரிசி, கோதுமை மா, வளமாக்கி சில பல்வேறு விடயங்கள் (முழுப் பட்டியலையும் கீழே பார்க்கவும்*) ஆகியவற்றின்

---

* (அ) உணவு இறக்குமதிகள் : அரிசி, கோதுமைமா, கோதுமைத் தானியம், சிறுபிள்ளைகளின் பாலுணவு, கருவாடு, மைசூர்ப் பருப்பு (முழு மண்ணிற அவலரையும், உடைக்கப்பட்ட செந்நிற அவரையும்) கொத்தமல்லி, சீரகம்.

(ஆ) பிற இறக்குமதிகள் : வளமாக்கிகள், பன்னாட்டு மருந்துவகை, புத்தகங்கள், வெளியீடுகள், சஞ்சிகைகள், புதினத்தாள்கள், தேசப் படங்கள், கோட்டுப்படங்கள், ஈருளி, இழுபொறிகள், இவற்றிற்கான கருவிகள், உதிரிப்பாகங்கள், கேட்க உதவும் கருவிகள், செயற்கைப் பற்களும், கண்களும், உறுப்புக்களும், புல்லின எண்ணெய், கொழுப்பு, ஆலையிடுதற்குரிய கொப்பரா.

(இ) பின்வரும் விடயங்கள் பதிலீடுசெய்து தயாரிப்பதற்குத் தேவையான மூலப்பொருட்கள், அடைக்கும் பொருட்கள், இயந்திரம், சாதனம், உதிரிப்பாகங்கள் :

(i) வளமாக்கி
(ii) கோதுமை மா
(iii) குழந்தைகளின் பாலுணவு
(iv) மேனாட்டு மருந்து வகை

(ஈ) இலங்கையில் தொழிற்படும் இலங்கை மத்திய வங்கியினாலும், வர்த்தக வங்கிகளினாலும் இறக்குமதி செய்யப்படும் நாணயத்தாள்களினதும் நாணயங்களினதும் இறக்குமதி.

(உ) 20 சதவீத உத்தரவாதக் கட்டணத்திற்கு உட்பட தேயிலைத் தொழிற்சாலையைப் புதுப்பித்தலுக்காக ஆசிய அபிவிருத்தி வங்கிக் கடன்களின் கீழ் நிதியீடுசெய்யப்பட்ட இரக்குமதிகள்.

(ஊ) மஸ்கேலிய ஓயா செயற்றிட்டப்படி 11இற்காகப் பன்னாட்டுப் புத்தாக்க அபிவிருத்தி வங்கியினால் வழங்கப்பட்ட கடனின் கீழான இறக்குமதிகள்.

இறக்குமதிகளேயும் தூதுவர் கணக்குகளேயும் கட்புலனுகாக விடயங்களில் சேம நிதி நன்மைகளின் பணவனுப்பல்களேயும் தவிர்த்து ஏனேய எல்லாக் கொடுக்கல் வாங்கல்களும் மிகைச் செலாவணி வீதத்தில் நடைபெற்றன. 1973, 1974 இற்கான வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்கள் பின்வருமாறு:

அட்டவணே II (ஏ) 6

**இலங்கை வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்கள் 1973/1974***

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1973 | | | | 1974* | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | முகப்புப் பெறுமதி | உத்தியோக பூர்வமான வீதம் | சான்றிதழ் வீதம் | மொத்தம் | முகப்புப் பெறுமதி | உத்தியோக பூர்வமான வீதம் | சான்றிதழ் வீதம் | மொத்தம் |
| நடைமுறை வரவுகள் ... | | 1,843 | 1,021 | 2.864 | | 2,809 | 1,320 | 4,129 |
| ஏற்றுமதிகள் | | 1,694 | 652 | 2,346 | | 2,492 | 884 | 3,376 |
| சேவைகள்1 ... | | 149 | 369 | 518 | | 317 | 436 | 753 |
| நடைமுறைக் கொடுப்பனவுகள் ... | | – 920 | –2,105 | –3,025 | | –2,085 | –2,942 | –5,027 |
| இறக்குமதிகள் ... | | – 875 | –1.769 | –2.644 | | –2,035 | –2,568 | –4,603 |
| சேவைகள்1 ... | | – 45 | – 336 | – 381 | | – 50 | – 374 | – 424 |
| மூலதனக் கணக்குகள் ... | | 1,068 | – 907 | 161 | | 2,051 | –1,152 | 899 |
| நாணயமல்லா மூலதனம் | | 1,402 | – 924 | 478 | | 1,689 | 1,168 | 521 |
| வரவுகள் ... | | 1,402 | 6 | 1,408 | | 1,689 | 12 | 1,701 |
| கொடுப்பனவுகள் | | — | 930 | 930 | | — | 1,180 | 1,180 |
| சாணய மூலதனம் .. | – 19 | – 315 | — | – 334 | 220 | 142 | — | 362 |
| வரவுகள் .. | 123 | 23 | — | 146 | 284 | 239 | — | 523 |
| கொடுப்பனவுகள் ... | 106 | 338 | — | 444 | 120 | 97 | — | 217 |
| மதிப்பீட்டிலுள்ள வேறுபாடு (தேறிய) ... | – 36 | — | — | – 36 | 56 | — | — | 56 |
| ஏனேயவை (தவறுகளும் விடுபட்டவையும்) ... | — | — | 17 | 17 | — | — | 16 | 16 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

1. தனிப்பட்ட மாற்றல்களேயும் உத்தியோகபூர்வமான மாற்றல்களேயும் உள்ளடக்கியது (நன்கொடைகள்.)
* தற்காலிகமானவை.

## (இ) வெளிநாட்டு இருப்புச்சொத்துக்கள்

ஆண்டிறுதி தொடக்கம் ஆண்டிறுதி வரையான ஐந்தாவது தொடர்ச்சியான ஆண்டில் இலங்கையின் மொத்த வெளிநாட்டு இருப்புச்சொத்துக்கள் 1974 திசெம்பர் இறுதியில் ரூ. 8,890 இலட்சமாக அதிகரித்து சென்ற ஆண்டிறுதித் தொகையிலும் பார்க்க ரூ. 380 இலட்சம்கொண்ட அதிகரிப்பைக் காட்டின. வெளிநாட்டுப் பொறுப்புக்கள் மிகக் கணிசமானளவிற்கு ஏற்பட்டமையால் சென்மதி நிலுவை நடைமுறைக்கணக்கில் என்றுமில்லாத பெருமளவு பணக்குறை ஏற்பட்டபோதும் இவ்விருப்புச் சொத்துக்களில் அதிகரிப்பு ஏற்பட்டது.

அட்டவணை II (ஏ) 7

**இலங்கையின் வெளிநாட்டுச் சொத்துக்கள்***

ப. இ. ரூபாய்கள்

| | திசெம்பர் 1972 | திசெம்பர் 1973 | திசெம்பர் 1974 | மாற்றம் 1972/73 | மாற்றம் 1973/74 |
|---|---|---|---|---|---|
| அரசாங்கம் ... ... .. | 53.7 | 3.3 | 0.5 | — 50.4 | — 2.8 |
| அரசாங்க முகவர் நிலையங்களும் நிறுவனங்களும் ... .. | 67.3 | 70.7 | 74.3 | + 3.4 | + 3.6 |
| மத்திய வங்கி ... .. | 285.4 | 480.5 | 420.1 | + 195.1 | — 60.4 |
| வர்த்தக வங்கிகள் ... . | 320.3 | 296.7 | 393.9 | — 23.6 | + 97.2 |
| மொத்தம் ... ... ... | 726.7 | 851.2 | 888.8 | + 124.5 | + 37.6 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

* சீனுவுக்குச் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது.

மத்திய வங்கி வெளிநாட்டு இருப்புச்சொத்துக்களின் முக்கிய உடைமையாளராகவிருந்தபோதும் வர்த்தக வங்கி உடைமைகளும் வர்த்தக வங்கிகளினூற் கழிவுசெய்யப்பட்ட ஏற்றுமதி உண்டியல்களின் பெறுமதி அதிகரிப்பினுல் குறிப்பிடத்தக்களவு உயர்வுற்றன. இவை 1973இல் ரூ. 2,020 இலட்சமாக விளங்கி 1974இல் ரூ. 3,038 இலட்சமாக அதிகரித்தன. வர்த்தக வங்கிகள் வசமுள்ள வெளிநாட்டு இருப்புச்சொத்துக்களின் பெறுமதியில் ஏற்றுமதி உண்டியல்கள் 75 சதவீதத்திற்குமேல் வகைகூறின. இவ்வதிகரிப்பு ஏற்றுமதிகளுக்கான கொடுகடன் நியதிகளைத் தளர்த்தியமையல்லாது ஏற்றுமதிகளுக்கான உயர்ந்த விலைகளினுல் ஏற்பட்டது.

**(ஈ) வெளிநாட்டுக் கடனும்* கடன் தீர்ப்பனவும்**

மிகப்பெருமளவு தொடர்ச்சியான சென்மதி நிலுவைக் குறைகளை ஒதுக்குகளினுல் நிதியிடமுடியாத நிலை, வெளிநாட்டுக் கொடுகடன்களில் இக்குறைகளை நிதியிடும் முக்கிய தகைமையை ஏற்படுத்தியுள்ளது. இதன் விளைவால் வெளிநாட்டுப் பொறுப்புக்கள் மிகப் பெருமளவில் அதிகரித்துள்ளன. பல ஆண்டுகளாக வெளிநாட்டுக்கடனில் ஏற்பட்ட படிப்படியான அதிகரிப்பின் தவிர்க்கமுடியாத விளைவு கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளின் மீதான தொடர்பான அதிகரிப்பாகும். முதலையும் வட்டியையும் திரும்பக் கொடுத்தல் ஏற்றுமதி வருமானங்களிலான முதல் அறவீடாகும்.

நீண்டதவணை மூலதனத்தின் மீதான ஆண்டு வட்டிக்கொடுப்பனவுகள் பொதுவாகச் சிறியளவாக விளங்குவதினுல் பணக்குறைகளை நிவர்த்தி செய்வ

* இக்குறிப்பில் மத்திய வங்கி, தனியார் துறை போன்ற நிதிநிறுவனங்களின் வெளிநாட்டுக் கடனிலை உள்ளடக்கப்பட்டிருப்பதால், இப்பகுதியில் உள்ள தரவுகள் அரசாங்க நிதி என்ற பகுதியில் கொடுக்கப்பட்ட தரவுகளிலிருந்து மாறுபட்டுக் காணக்கூடும்.

தற்கு நீண்ட தவணைக் கடனே மிகப்பொருத்தமான நிதியிடல் முறையாகும். எனினும், பெரும் நீண்டதவணை மூலதனத்தின் அளவு பணக்குறைகளை நிவர்த்தி செய்யும் அளவிற்குப் போதாது மிகக்குறைந்து விளங்குகின்றமையால் ப.நா,நி. இலிருந்து பெறும் எடுப்பனவுகள். நிரம்பலர் கொடுகடன்கள், ஏனைய வங்கி களிலிருந்து பெறும் கடன்பாடுகள் ஆகிய ஏனைய வகைக் கடன்பாடுகளுக்கு கூடிய தீர்ப்பனவுச் செலவுகள் ஏற்பட்டாலும் இவற்றையே பயன்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. 1970களின் தொடக்கத்தில் வெளிநாட்டுக் கடன் மீதான தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் வெளிநாட்டிலிருந்து பெற்ற நாட்டின் வெளிநாட்டுச் செலாவணி வருமானங்களில் ஏறக்குறைய 20 சதவீத மாக விளங்கின.

கடந்த ஐந்து ஆண்டுகளில் இலங்கையின் வெளிநாட்டுக் கடன் தீர்ப்பன வுக் கொடுப்பனவுகள் அட்டவணை II (ஏ) 8இல் தரப்பட்டுள்ளன. 1974இல் மொத்தக் கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் ரூ. 6,110 இலட்சமாக விளங்கி, கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் ரூ. 5,490 இலட்சமாகவும் (1973இன் ரூ. 5,210 இலட்சம்), வட்டிக் கொடுப்பனவுகள் ரூ. 1,340 இலட்சமாகவும் (1973இல் ரூ. 1.080 இலட்சம்) விளங்கின. கடன் தீர்ப்பன வுக் கொடுப்பனவுகள் பெருமளவு அதிகரிப்பைக் காட்டவில்லை. ஆனல், வட்டிக் கொடுப்பனவுகள் 1969 இல் ரூ. 680 இலட்சத்திலிருந்து 1974இல் ரூ. 1,340 இலட்சமாக உயர்வுற்றன. வட்டிக் கொடுப்பனவுகளின் அதிகரிப்பிற்கு கடன்பாடுகளின் அதிகரித்துச்செல்லும் அளவல்லாது கூடிய வட்டி வீதங்கள் அறவிடப்படும் குறுந்தவணைக் கொடுகடன்களின் அதிகரித்த பயன்பாடும், உலகப் பணச்சந்தைகளில் உயர்ந்துசெல்லும் வட்டிவீதங்களுமே காரணமாகும்

வெளிநாட்டுக் கடன் கொடுப்பனவுகளால் பயன்படுத்தப்படும் நடை முறைக் கணக்கு மீதான வெளிநாட்டுச் செலாவணி வருவாய்களின் பங்காக விளங்கும் கடன் தீர்ப்பனவு விகிதம் பொதுவாக ஒரு நாட்டின் வட்டிச் சுமையை மதிப்பிடுவதற்குப் பயன்படுத்தப்படுகின்றது. பொதுவாக ஒரு உயர்ந்துசெல்லும் விகிதம் அதிகரித்த சுமையையும், சென்மதி நிலுவையில் கூடிய குறுந்தவணைக் கடன்கள் திரும்பக் கொடுக்கவேண்டிய இறுக்க நிலையை யும் காட்டுகின்றது. அதேசமயம், குறைந்துசெல்லும விகிதம் இதற்கு எதிர் முரணன நிலையைத் தோற்றுவிக்கும். இலங்கையைப் பொறுத்தவரை, 1973 ஆம் ஆண்டு கடன் தீர்ப்பனவு வீதம் 23.0 சதவீதத்தை அடைந்தபின், 1974இல் 17.9 சதவீதமாகக் குறைவுற்றது. மொத்தக் கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவு எக்காலத்திலும் பார்க்க உயர்ந்து விளங்கிய இக்காலத்தில் இங்ஙனம் நிகழ்வுற்றமைக்கு முற்றிலும் 1974இன் வருமானங்கள் கணிசமான ளவிற்கு உயர்வுற்று விளங்கியமையே காரணமாகும். கடன் தீர்ப்பனவு விகி தம் குறைவுறுவதனல் அறியப்படும் கடன் தீர்ப்பனவுப் பிரச்சினையைத் தீர்ப் பதற்கு வருமானங்களில் தொடர்ச்சியான இலாபங்களைப் பெறுதல்வேண்டும்.

அட்டவணை II (ஏ) 8

**வெளிநின்ற வெளிநாட்டுக் கடன்பாடுகளும் பணிக் கொடுப்பனவுகளும் 1970 - 1974**

ப. இ. ரூபாய்கள்

| | 1970 | 1971 | 1972 | 1973† | 1974‡ |
|---|---|---|---|---|---|
| நீண்டகால கடன்பாடுகள் ... .. | 1,596.4 | 1,919.0 | 2,336.8 | 2,687.4 | 2,874.4 |
| வழக்குனர்கள் கொடுகடன்கள் ... .. | — | 74.6 | 94.0 | 329.1 | 517.8** |
| ப. நா. நி. எடுப்பனவுகள் ... | 489.8 | 448.2 | 466.1 | 463.5 | 627.7 |
| வங்கி கடன்பாடுகள் ... .. | 411.5 | 333.8 | 352.2 | 245.2 | 261.9 |
| மொத்தம் ... .. | 2,479.7 | 2,775.6 | 3,249.1 | 3,725.2 | 4,333.8 |
| 1. படுகடன் பணிக் கொடுப்பனவுகள் ... | 453.4 | 491.6 | 480.2 | 629.2 | 683.7 |
| (அ) கடனழிப்பு ... | 353.7 | 387.1 | 378.3 | 520.8 | 549.3 |
| (ஆ) வட்டி ... ... | 99.7 | 104.5 | 101.9 | 108.4 | 134.4 |
| 2. பொருட்கள் சேவைகளின் ஏற்றுமதி வருவாய்கள் .. | 2,253.3 | 2,244.2 | 2,205.9 | 2,733.3 | 3,820.3 |
| 3. படுகடன் பணி விகிதம் (2இன் சத வீதமாக 1) .. ... | 20.1 | 21.9 | 21.8 | 23.0 | 17.9 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

* குறுங்கால வர்த்தக கொடுகடன் நீங்கலாக

† திருத்தியமைக்கப்பட்டது

‡ தற்காலிகமானவை

** ஒற்றேபர் எண்தொகைகள்

### (உ) மாற்றலுக்குரிய ரூபாய்க் கணக்குத் திட்டம்

வழமையாக ஏற்றுமதி செய்யப்படாத பொருட்களின் ஏற்றுமதியினை அதிகரிப்பதற்காக செலாவணி நிதித் தூண்டுதல்களை அளிக்கும் முறையில் கொண்டு வரப்பட்ட மாற்றலுக்குரிய ரூபாக் கணக்குத் திட்டம் சில திருத்தங்களுடன் 1974 முழுவதும் தொடர்ந்தும் நடைமுறையிலிருந்தது. 1974 ஒகத்து தொடக்கம் சில நிபந்தனைகளின்கீழ் ஒரு கணக்கிலிருந்து இன்னொரு கணக்கிற்கு நிதிகளை மாற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவ்வளவு காலமும் மாற்றலுக்குரிய ரூபாக் கணக்கு வசதி உடனடி ஏற்றுமதியாளருக்கு மட்டுமே வரையறுக்கப்பட்டது; இதன் திருத்தம் இத்திட்டம் நடைமுறையில் இயங்கும் சமமின்மையை நீக்குவதைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. இத்திருத்தம் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது தொடக்கம் ஏற்றுமதியாளர்கள் உண்மை உற்பத்தியாளருக்கு இந்நன்மையை வழங்குவதற்கு ஏதுவாயிருந்தது. 1975 வரவுசெலவுத்திட்டத்துடன் மாற்றலுக்குரிய ரூபாக்கணக்கில் வரவு வைப்பதற்கான வீதங்களில் சில மாற்றங்கள் செய்யப்பட்டன இரத்தினக்கல் ஏற்றுமதிகள், தனியாட்களால் சுற்றுலாவினருக்கு ஏற்றுமதியும் விற்பனையும் செய்யப்பட்ட மூலச்சித்திரங்கள், சிற்பங்கள் மற்றும் ஏனைய கலைப்படைப்புக்கள், தனியாட்களால் வெளிநாடுகளில் வெளியிடப்பட்ட விஞ்ஞான இலக்கியப் படைப்புக்கள் அத்துடன் தனியாட்களால் தொழிற்றுறையிலும், ஆலோசனைத் துறைகளிலும் ஆற்றிய பணிகளுக்கு முன்பு வருவாயில் 25 சதவீதம்

பெற்றமைக்கு மாறாக 20 சதவீதம் பெறுவதற்கு உரிமையுடையவர்களென முடிவுசெய்யப்பட்டது. ஏனைய வருவாய்களுக்கு இவ்வாய்ப்பின் அடிப்படையில் முன்பு 3 சதவீதம் பெறும் தகைமையை பெற்றவருக்கு 5 சதவீதமாக அதிகரிக்கப்பட்டது.

1974இல் உத்தரவாதம்பெற்ற வணிகர்கள் வசமுள்ள மாற்றலுக்குரிய ரூபாக் கணக்குகளின் எண்ணிக்கை 535 ஆல் அதிகரித்து, ஆண்டிறுதியில் 1244ஆக விளங்கியது. இவ்வாண்டின்போது, இக்கணக்குகளில் வைக்கப்பட்ட வரவுகள் ரூ. 694 இலட்சமாக அமைந்திருக்கையில், 1974, டிசெம்பர் 31இல் வரவுகளின் மொத்தம் ரூ. 1236 இலட்சமாக விளங்கியது- மறுபுறம் இவ்வாண்டில் மொத்தப் பற்றுக்கள் ரூ. 549 இலட்சமாக விளங்கியிருக்கையில் பற்றுக்களின் கூட்டு மொத்தம் ரூ 775 இலட்சமாக அமைந்தது.

1974இல் மாற்றலுக்குரிய ரூபாக் கணக்குக் கொடுக்கல் வாங்கல்களில் ஒரு முக்கியமான அபிவிருத்தி என்னவெனில், அக்கணக்குகளில் வரவிலிருந்த தொகைகளின் பயன்படுத்துகையின் அளவு அதிகரித்தமையேயாகும். மொத்தத் திரட்சியான ரூ 542 இலட்சத்தில் 1973 டிசெம்பர் இறுதிவரை பயன்படுத்தப் பட்ட தொகை ரூ. 226 இலட்சமாகும். இது பயன்படுத்துகை அளவில் 42 சதவீதமாகும். 1974இன் இறுதியில் இந்த அளவு 63 சதவீதமாக அதிகரித்தது. 1974இன் கொடுக்கல்வாங்கல்களை மட்டும் கணக்கெடுப்பின், பயன்படுத்துகையின் அளவு 79 சதவீதமாகும்.

முன்னைய ஆண்டினைப்போல் 1974இல் மாற்றுதலுக்குரிய ரூபாக்களுக்கு இரத்தினக்கல் ஏற்றுமதிகள் முதன்மையாக அமைவதுடன் ரூ.472இலட்சத்திற்கு வகைகூறுகிறது. எனினும், அவற்றின் தொடர்பான முக்கியத்துவம் முன்னைய ஆண்டின் மொத்தத்தின்வரவுகளான 84 சதவீதத்திலிருந்து 1974இல் 70 சதவீதமாக வீழ்ச்சியுற்றது. இதற்கு ஓரளவு காரணம் இரத்தினக்கல் விற்பனையினது ஏற்றுமதியின் குறைவான வருவாய்களும். மற்றையது இத்திட்டத்தில் தொடர்புடைய ஏனைய விடயங்கள் கூடிய வருவாய்களைப் பெறும் நிலையும் காரணமாகும். இரத்தினக் கல்லிற்கு வரவு செலவுத் திட்டத்தில் மொழியப்பட்ட குறைவான அளவு வீதங்களும் ஏனையவற்றிற்கு மேலான அளவு வீதங்களுமானஒரு சார்புத்தன்மை இரத்தினக் கல்லிலிருந்து கிடைக்கும் வருவாய்கள் இக்கணக்குகளுக்கு வரவுவைக்கப்படுவதை மேலும் குறைக்கலாம்.

முன்னைய காலப்பிரிவு போன்று 1974இல் மாற்றலுக்குரிய கணக்குகளில் ஏற்பட்ட பெரும் அளவிலான பற்றுகளுக்கு இறக்குமதிகள் காரணமாகின்றன. அட்டவணை II (ஏ) 9இல் காட்டப்பட்டவாறு, ஆண்டுக்காலப்பிரிவில் ஏற்பட்ட மொத்தப் பற்றுக்களான ரூ. 549 இலட்சத்தில, ரூ. 451 இலட்சம் (82 சதவீதம்) இறக்குமதிகளுக்கமைய முறைய ரூ. 65 இலட்சம் பயணங்களுக்கும், ரூ. 33 இலட்சம் உள்ளூர்ச் செலவுகளுக்குமாக அமைகின்றன. வழங்கப்பட்ட இறக்குமதி அனுமதிப்பத்திரங்கள் மீதான தரவுகள் அடிப்படையில் நோக்குகையில் இறக்குமதிகளுக்கான மொத்தகொடுப்பனவுகள் வர்த்தகப்பங்கு விடயங்களுக்கும் (48 சதவீதம்) கைத்தொழில் மூலப்பொருட்களுக்குமாக (28 சதவீதம்) அமைகின்றன. வழங்கப்பட்ட மொத்த அனுமதிப்பத்திரங்களில் முறையே மோட்டார் வாகனங்களின் இறக்குமதிகளுக்கு 12 சதவீதம் நேரடிப் பாவனையாளர் விடயங்களுக்கு 11 சதவீதமாக மாற்றலுக்குரிய ரூபாய்கள் பயன்படுத்தப்பட்டன இத்திட்டத்தால் பெறப்பட்ட மொத்த மாற்றலுக்குரிய ரூபாய் வருவாய்கள் நேரடியாகத் தனியார் நுகர்விற்கு பயன்படுத்தப் பட்டதைவிட கைத்தொழில் விருத்திக்கே பயன்படுத்தப்பட்டுள்ளதெனக் காணலாம்.

## அட்டவணை II (ஏ) 9

## மாற்றக்கூடிய ரூபாய் கணக்குகள் திட்டம்

(பத்து இலட்சம் ரூபாய்களில்)

| காலப் பகுதி | வரவு | | | | | | பற்று | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | கணக்குகளின் தொகைகள் | இரத்தினக் கல் ஏற்றுமதிகள் | ஏனைய ஏற்றுமதிகள் | சுற்றுலா | ஏனைய | மொத்தம் | பயணம் | இறக்குமதிகள் | உள்நாட்டு | மொத்தம் |
| 1973 திசெம்பர் முடிவில் | 709 | 46.490 | 6.786 | 0.874 | 0.051 | 54.202 | 3.037 | 19.143 | 0.451 | 22.630 |
| 1974 | 535 | 47.249 | 19.315 | 2.227 | 0.621 | 69.412 | 6.463 | 45.110 | 3.295 | 54.868 |
| 1974 திசெம்பர் முடிவில் | 1244 | 93.739 | 26.101 | 3.101 | 0.672 | 123.614 | 9.500 | 64.253 | 3.746 | 77.498 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.